விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 24 செவ்வாய்க்கிழமை (09.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265







# அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களை வன்னியிலிருந்து வெளியேற பணிப்பு

## அரசாங்கம் திடீர் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரியும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை உடனடியாக வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான கடிதங்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சகல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நேற்றுப் பிற்பகல் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வயலின் இசைக் கலைஞர் குன்னக்குடி திடீர் மரணம்



(சென்னை)

பிரபல வயலின் இசைக் கலைஞர் குன்னக்குடி வைத்தியநாதன் திடீரெனக் காலமானார். அவருக்கு திடீரென உடல் நலம் ப்ாதிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனளிக்காமல் அவர் இறந்து போனார்.

வயலின் இசையில் தனது விரல் லாவகத்தினால் தனக்கென தனிப் பாணியை உருவாக்கி மக்களை மயக்கியவர். 'மருதமலை மாமணியே' — printed as: ‘மகுடி எடுக்கு ஆடும் ஆடுபாம்பே’ (12 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

மணலாற்றில் இருந்து படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் வயலில் சூடடித்துக் கொண்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

மணலாற்றுப் பிரதேசத்திலுள்ள குமிழமுனை தண்ணிமுறிப்புப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வயலில் சூடடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்துப் படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் ஐந்தாம் கட்டை அலம்பிலைச் சேர்ந்த 2 (12 ஆம் பக்கம் பார்க்க)

## சகல தரத்தில் உள்ளவர்களுக்கும் ஒரே அளவான சம்பள அதிகரிப்பு

### உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையின் அனைத்துத் தரங்களில் உள்ளவர்களுக்கும் ஒரே வேதன அதிகரிப்பை வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை இன்று ஆரம்பிக்குமாறு உயர் நீதிமன்றம் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்ததாக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் எமக்குத் தெரிவித்தார்.

சம்பள உயர்வு கோரி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் உயர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களமுனை மோதல்களில் 22 புலிகள் பலி என்கிறது இராணுவம்

(கொழும்பு)

வன்னிக் களமுனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 22 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் 9 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என இராணுவத் தலைமையகம் தெரிவிக்கின்றது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் இரு தரப்பு மோதல்களில் 22 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களில் 8 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் யாழ்ப்பாணம், முகமாலை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மேலும் ஒரு இரா (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கைக் குண்டுத் தாக்கு பத்துப் பொதுமக்கள் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் பத்து பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு ஐந்துலாம்பு சந்தியில் இரவு 9.30 மணியளவில் அடையாளம் தெரியாதோர் இக்கைக்குண்டுத்தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் காயமடைந்த பத்து பொதுமக்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் மூத்த காவல்துறை அத்தியட்சகருமான றஞ்சித் குணசேர தெரிவித்துள்ளார்.

கைக்குண்டுத் தாக்குதலில் ஐந்து வாகனங்களும் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். சம்பவ இடத்தில் பொலிஸாரும் இராணு வத்தினரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச-5)

## நவக்கிரியில் துப்பாக்கிச் சூடு தாயும் மகளும் படுகாயம்

(புத்தூர்)

புத்தூர் நவக்கிரியில் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகித் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் நவரத்தினம் பூரணம் (வயது-52) என்ற தாயும் அவரின் மகளான நவரத்தினம் துஷாந்தினி (வயது-30) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

நேற்று மாலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மற்றும் ஐ.சி.ஆர்.சி. வாகனங்கள் மட்டுமே வன்னிப் பகுதிக்குள் அனுமதி

(கொழும்பு)

ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் செல்வதற்கு ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் வாகனங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் - ஐக்கிய நாடுகள் நிறுவனங்களைச் சேராத ஏனைய சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் வாகனங்கள் வன்னிப்பகுதிக்குள் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் அதிகாரிகள் வன்னிப் பிரதேசத்தில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவுக்கு ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வருவதற்கான அனுமதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். எனப்படும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகம்-டபிள்யு. எவ். பி. எனப்படும் உலக உணவுத்திட்டம் - ஐ.சி.ஆர்.சி. எனப்படும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஆகியவற்றின் வாகனங்கள் லொறிகள் என்பவை மட்டுமே தற்போது வன்னிப் பிரதேசத் (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியில் எதிர்வரும் வாரங்களில் நெருக்கமாக மோதல் இடம்பெறும்

## இக்பால் அத்தாஸ் ஆருடம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுககும இலங்கை அரசாங்கப் படைகளுக்கும இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்திருக்கும் நிலையில் எதிர்வரும் வாரங்களில் இரண்டு தரப்பும் அருகருகே நெருக்கமாக நின்று மோதவிருப்பதாக இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக மோதல்களில் ஈடுபட்டுவந்த விடுதலைப் புலிகள், பாரிய சக்திவாய்ந்த இராணுவத்தினருடன் அண்மையில் இருந்து மோதி இழப்புக்களை ஏற்படுத்த விரும்பாமல் சற்றுப் பின்வாங்கியிருந்ததாக சுட்டிக்காட்டும் அவர், அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் இராணுவத்தினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் முன் நகர்வுகளை தாமதப்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகள் தமது பலம்வாய்ந்த போராளிக்குழுக்களை இரண்டு முனைகளில் களத்துக்கு அனுப்பி இருப்பது மோதல்கள் மேலும் வலுவடையுமா என்ற கேள்வியை தோற்றுவித்திருப்பதாக அவர் தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாச்சிக்குடாவின் தென் பகுதி மற்றும் மல்லாவி, துணுக்காய், யோகபுரம் ஆகியவற்றின் வெளிப்பகுதி ஆகிய இரண்டு முனைகளிலும் பலம்வாய்ந்த போராளிகளை குவித்திருப்பதானது விடுதலைப் புலிகள் தமது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை மேலும் இழக்காமல் தடுப்பதற்காகவா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வன்னியின் மேற்குப் பகுதியில் கடந்த மாதங்களில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் நடந்து கொண்ட விதம் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளது.

அந்த மோதல்களில் இராணுவத்தினரின் ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல்களால் ஏற்படும் சேதங்களை விடுதலைப் புலிகள் தவிர்த்து வந்தனர் என இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக விடுதலைப் புலிகளுக்கு இழப்பு ஏற்படவில்லை எனத் தான் சொல்ல வரவில்லை எனவும் ஆட்பலம் மற்றும் ஆயுத பலம் என்பன பெரிய அளவில் அவர்கள் இழக்கவில்லை எனவும் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதாக தனது பத்தியில சுட்டிககாட்டியிருக்கும் அவர், இலங்கை விமானப் படையினரின் விமானக் குண்டுத் தாக்குதல்களாலேயே பாரியளவு சேதம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டதாகக் கூறுகிறார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையிலான மோதல்கள் இந்த வாரத்திலிருந்து மேலும் உக்கிரமடையலாம் என இராணுவ ஆய்வாளர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தற்போது ஆரம்பித்திருக்கும் மழையுடன் கூடிய காலநிலை மோதல்களில் தாக்கததை செலுத்தும் என ஆய்வாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லை

## ஜேர்மன் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இராணுவ வழிமுறைகளின் மீது தாம் நம்பிக்கை கொள்ளவில்லை எனத் தெரிவித்திருக்கும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜேர்கன் வீர்த் அரசியல் வழிமுறைகள் ஊடாகவும், மனித உரிமைகளைப் பேணுவதன் மூலமுமே இனப்பிரச்சினைக்கான தீர்வினை எட்ட முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற 'சமாதானத்தை கட்டியெழுப்பபதுவதிலும் பொருளாதார வளர்ச்சியிலும் சமநிலையைப் பேணுதல்' என்னும் தலைப்பிலான இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தில் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வெற்றியை. அடிப்படையாகக் கொண்டே அரசியல் சிந்தனைகள் வகுக்கப் பட்டுள்ளதன் காரணமாக யுத்தம் இன்று பிரபல்யமடைந்துள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தின் பெறுமதி மதிக்கப்படவில்லை என வரி செலுத்துவோர் கருதுவார்களாயின் அவர்களின் ஆதரவு யுத்தத்திற்கு தொடர்ச்சியாக கிடைக்காது.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவி செய்ய முற்படும்போது பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பணத்தை செலவிடாது. ஆயுதங்களுக்கு பணததை செலவு செய்கின்ற நாடுகளுக்கு நீங்கள் ஏன் ஆதரவு அளிக்கின்றீர்கள் என மக்கள் தம்மிடம் கேள்வி எழுப்புவதாகவும் அவர் தெரிவித்துளளார்.

இவ்வாறானதொரு சூழலில யுததமும முரண்பாடுகளும் ஒருபோதும் வெளிநாட்டு உதவிகளை கொண்டுவந்து தாராது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்களே தமது சொந்த நாட்டின் மீது நம்பிக்கை வைக்காத நிலையில் ளிநாட்டு முதலீட்டாளர்கள் எவ்வாறு இலங்கை மீது ஆர்வம் காட்டுவார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் இராணுவ மேஜர் உள்ளிட்ட 9 பேர் கைது

பொலநறுவை கவுடுல்ல பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இராணுவ மேஜர் ஒருவர் உள்ளிட்ட மேலும் சில பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராணுவ மேஜர், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், கடற்படை வீரர் உள்ளிட்ட 9 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலநறுவை வனப் பாதுகாப்பு அதிகாரி ரஞ்சித்மாரசிங்கவினால் குறித்த நபர்கள் முதலில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

பின்னர் குறித்த சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் குறிப் பிடப்படுகிறது.

பஜிரோ ஜீப், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், கையடக்கத் தொலைபேசிகள்; பூஜைப் பொருட்கள் போன்றவற்றை பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து மீண்டுள்ளனர். (ச)

# ஸ்ரெய்ன்ஸ் விண்கல்லை கடந்து சென்ற ரொஸேதா

ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் ஆட்களற்ற ரொஸேதா விண் பரிசோதனை கூடமானது ஸ்ரெய்ன்ஸ் விண்கல்லை 800 கிலோமீற்றர் தூரத்தில் கடந்து அந்த விண்கல் தொடர்பான தகவல்களை பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.

வியாழக் கிரகத்துக்கு அப்பாலுள்ள நீள் வட்டப் பாதையை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் அணுகுவதை இலக்காகக் கொண்டு 2004 மார்ச் மாதம் 2ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்ட ரொஸேதா விண்கலமானது கடந்த வெள்ளிக்கிழமை பூமியிலிருந்து 360 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் பயணித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த விண்கலம் 5 கிலோமீற்றர் அகலமான ஸ்ரெய்ன்ஸ் விண்கல்லை படம் பிடித்து அதனை பூமிக்கு அனுப்பியுள்ளது. 600 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் முதலீட்டில் உருவாக்கப்பட்ட இந்த் விண்கலம்2010ஆம் ஆண்டு ஜுன் 10ஆம் திகதி லுதெஷியா விண்பாறைக்கு 3000 கிலோமீற்றர் தொலைவில் பயணிக்கும் என எதிர்வு கூறப்படுகிறது. (ச)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வீட்டில் இருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அவர்களின் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளனர். மணிக்கூட்டு ஒழுங்கை, நீராவியடியைச் சேர்ந்தவர்களான ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா (வயது 49) அவரின் மகனான மனோராஜ் (வயது 10) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் நேற்றுக் காலை முதல் காணவில்லை என்றும் அதனையடுத்து அவர்களின் வீட்டை உடைத்து உள்ளே சென்றபோது இருவரும் சடலமாக காணப் பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவருமே அந்த வீட்டில் வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவர்கள் இருவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என யாழ்ப்பாண பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளன. (எ)


## விற்பனைக்கு

**P III கொம்பியூட்டர், UPS 1 ஆகியன விற்பனைக்கு உண்டு.**

*தொடர்பு:*

**ஸ்ரீராஜ்**
**சம்பந்தர் வீதி,**
**வட்டுக்கோட்டை.**

(C-1511)


# கைது செய்யப்பட்ட தேரர் விடுதலை

(கொழும்பு)

சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தை மீறும் வகையில் ஒலிபெருக்கியை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இராஜகிரிய வெலிக்கட பன்னல பங்ஞாலோக்க தேரரை விடுவிக்கும்படி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தேரர் தரப்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி தேரர் நீதிமன்றுக்கு சமுமளிக்காததன் காரணத்தை நீதிமன்றில் தெரிவித்தார். இந்த வேண்டுகோளை ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, பன்னல பங் ஞாலோக்க தேரரை விடுவிக்கும்படி உத்தரவிட்டார். (ச-5)

# பெண் ஊடகவியலாளர் மீது மட்டக்களப்பில் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ராதிகா தேவகுமார் நேற்றிரவு 7.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கல்லடியிலுள்ள மருந்தகம் ஒன்றின் அருகில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது வயிற்றில் காயமடைந்த ராதிகா தேவகுமார் மட்டக்களப்பு வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியேற்ற ஆரம்ப காலத்தில் இரண்டு வாரங்கள் மாத்திரம் அவரின் ஊடகச் செயலாளராகவும் செயலாற்றி வந்தார் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)



## இன்று ஒரு தகவல்

### மனித நேயம்

நமது உடம்பை நன்றாக வைத்துக் கொள்வதற்கு நல்ல உணவு ,தேவையான உடற்பயிற்சி, கவலைப் படாமல் இருப்பது இந்த மூன்றுவழிகளும் அவசியமானது .

இந்த மூன்றிலும் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த ஆரம்பித்தால் எந்த நோயும் நம்மை அணுகாது என்று டாக்டர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்வதும் ஒரு விதத்தில் நியாயம் தான்.அதனுடன் இப்பொழுது நான்காவதாக ஒரு விஷயத்தை சேர்த்திருக்கிறார்கள்அது தான் கொஞ்சம் வேடிக்கயாக[illegible]றது என்ன தெரியுமாஅது?

மனித நேயம்.

மற்றவர்களை நேசியுங்கள் அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். அது உங்கள் உடல் நலத்துக்கு நல்லது என்கிறார்கள்.

அடுத்தவர்களை நேசிப்பதற்கும் நம்முடைய உடல் நலத்துக்கும் என்ன சம்பந்தம்?

கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் கென்னத் பிரிடியர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

பொதுவாக நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது அல்லது மற்றவர்களை நேசிக்கும் போது மகிழ்ச்சியோடு இருக்கிறோம்.

அந்த சமயத்தில் நம் உடம்பில் இருக்கும் நோயை எதிர்க்கும் தன்மையுடைய கலங்கள் (cells of the Imunse System)முழு சக்தியுடன் இயங்குகிறது. அது இயங்கும் போது நமது உடம்பில் நோய்எதுவும் வருவதில்லை என்கிறார்அவர்.

ஆனால் அதே சமயம் நாம் கவலையுடன் இருக்கும் போதோ, தனிமையாக வாழும் போதோ நோய் எதிர்ப்புக் கலங்கள் உடலில் குறைவாகவே இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதனால் இப்படிப்பட்டவர்களுக்கு நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது என்கிறார் அந்த டாக்டர். இது சம்பந்தமாக சான்பிரான்சிஸ்கோவில் ஒரு ஆராய்ச்சி நடத்தினார்கள்.அதாவது குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்களைக் கண்டு பிடித்துஅவர்களுக்கு உடம்பில் என்னென்ன நோய்கள் இருக்கிறது என்பதை விபர மாகக் குறித்துக் கொண்டார்கள்.

அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி ஒரே இடத்தில் தங்க வைத்தனர். பின்னர் அவர்களை மூன்று பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்வது மாதிரியான பொறுப்புக்களை கொடுத்தார்கள்.ஒரு பிரிவுக்கு சிறைச்சாலைக்குப் போய் உபதேசம் சொல்லும் வேலை இன்னொருபிரிவுக்கு சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கும் வேலை இப்படி ஒவ்வொரு வேலை.

ஆறுமாதம் கழித்து அவர்களதுஉடம்பை பரிசோதனை செய்து பார்த்த போது பலருக்கு நோயின் தன்மை மிகவும் குறைவாக இருந்தது.

மற்றவர்களுக்கு உதவுதல் என்பது ஒரு வகை மனித நேயம். இதை ஆங்கிலத்தில் alquismஎன்பார்கள்.

இதை நம்மூர் ஆன்மீக வாதிகள் சொன்னால் விவாதம் செய்யஆரம்பிக்கிறோம்.இதையே விஞ்ஞானிகள் சொன்னால் ஏற்றுக் கொள்கிறோம். இந்தக் காலத்தில் எதுவாக இருந்தாலும் ஒரு நிரூபணம் தேவைப்படுகிறது.

ஒரு பஸ் போய்க் கொண்டிருந்தது ஒரு பெரிய ஆள் பெரிய மூட்டை ஒன்றின் மீது உட் கார்ந்திருந்தார். பஸ்ஸில் சரியான நெருக்கடி அசையவே முடியாமல் இரு ந்தது. கண்டக்டரும் பார்த்தார் அந்த ஆள் அசைவது மாதிரி தெரியவில்லை.ஒருஇடத்தில் பஸ் நின்றது. கண்டக்டருக்கு வந்த கோபத்தில்அந்த மூட்டையை உருட்டி வெளியே தள்ளி விட்டார். அப்பவும் அந்த ஆசாமி கவலைப் படாமல் இருந்தார்" என்ன சார் உங்களுக்கு கோபமே வரவில்லையா?"என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர்.அதற்கு இவர் "நான் எதற்காக கவலைப்பட வேண்டும் அந்த மூட்டை என்னுடையதில் லையே"என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வினைத்திறனற்ற சிறிய கட்சிகள் தடை செய்யப்பட வேண்டும்

### தினேஷ் குணவர்த்தனவின் கருத்துக்கு கண்டனம்

(கொழும்பு)

அரசியல் அரங்கத்தில் வினை திறனுடன்செயற்படாத சிறிய கட்சிகளைத் தடை செய்வதென்ற தீர்மானத்துக்குசிறுபான்மைக் கட்சிகள் தமதுஎதிர்ப்பைத்தெரிவித்துள்ளனர்.

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் வினைத்திறனுடன செயற்படாத சிறுபான்மைக் கட்சிகள் தடை செய்யபபடும் எனக் குறிப்பிட்டிருந்தார்

அமைச்சர் தினேஷ குணவாத்தன பிரதிநிதித்துவப்படுததும் மக்கள் ஐக்கிய முன் னணி 1989 ஆம் ஆண்டின் பின்னர் தனித்து எந்தத் தேர்தலிலும் போட்டியிடவில்லை என்ப தால் அந் தக் கட்சியும் தடை செய்யப்பட வேண்டும்என ஜனநாயக ஐக்கியமுன்னணியின் செயற்பாட்டாளர் றோய்போஹாவத்த தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய- முன்னணி வினைத்திறனுடன் செயற்படும் ஒரு கட்சியெனத் தெரி வித்திருக்கும் அவர் 2006ஆம் ஆண்டு கொழு ம்புமாநகர சபைத் தேர்தலில் தம்மால் 2ஆச னங் களை வெற்றி பெற முடிந்ததாகக் கூறினார். பல அரசியல் கட்சிகள் இருப்பதால் பெருந்தொகையான பணம் வீண் செலவாகிறது என அமைச்சர் கூறியி ருக்கும் கருத்துச் சரியானது என போஹாவத்த கூறினார்.

பொதுமக்களின் பணம் கட்சிகளின் பிரசார நடவடிக்கை களுக்குப் பயன்படுத்தப்படுவதுட ன் பல கட்சிகள் இருப்பதால் அனைத்துக்கும் வாக்காளர் அட்டை டகள் அச்சிட வேண்டிய தேவை இருப்பதாகவும் ஜனநாயக ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

ஜனநாயக செயற்பாட்டைத் தடைசெய்யும் வகையில் அமைச்சரின் கருத்து அ மைந்தி ருப்பதாக ஐக்கிய சோசலிசக் கட்சி யின் தலைவர் சிறுதுங்க ஜெய சூரியகூறினார். அவ்வாறானகருத்தொன்றைத் தெரிவிக்கும் உரிமை அமைச்சருக்கு இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் மறு சீரமைப்புத் தொடர்பான பாராளுமன்ற தெரி வுக்குழுவின் தலைவரிடமிருந் து17-வது திருத்தச் சட் டமூலம் முழு மையாக அமுல் படுத்தப்படும் என்ற யோசனையையே எதிர்பார்த்திருந்த தாக வும் இவ்வாறன கருத் தை இல் லையெனவும் சிறுதுங்க ஜெய சூரிய தெரிவித்தார்.

இதே வேளை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கருத்தை ஜன நாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் கண்டித்துள்ளார். (ஓ)

## வெளிநாடுகளில் அதிகாரிகள் என்ற போர்வையில் இலங்கைப் பணியாளர்களிடம் நிதி மோசடி

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கை பணியாளர்களிடம் நிதி மோசடியில் ஈடுபடும் நடவடிக்கை யொன்று தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி மோசடியில் ஈடுபடும் நபர்கள் இலட்சக் கணக்கான தொகையை மோசடியாக பெற்றுள்ளது குறித்து பதிவாகியு ள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் பணிப் பெண்களிடம் சுமார் 10 இல ட்சம் ரூபா சீட்டிழுப்பில் வெற்றி பெற்று ள்ளதாக விநயமாக பேசி அதற் கென வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு பண ம் கோரி வருவதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரியெனவும் வங்கி அதிகாரியெனவும் 2பேர் இந்த மோசடியில் ஈடுப ட்டு ள்ளதா க குறிப்பிட்ட பணியகத்தின் தலைவர் இவர்கள் குறித்து விசார ணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார். அத்துடன் இந்த மோசடிகளுடன் பணியகத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எவ்வித தொடர்புகளும் இல் லைெ யனவும் கிங்ஸ் லிரணவக்க தெரி வித்தார்.

இத்தகையநபர்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறும் அவர் இலங்கை பணியாளர்களை கேட்டுள்ளார். (ஓ-6)

## இராசி பலன்

09.09.2008
(ஆவணி 24. செவ்வாய்க் கிழமை
நவமி முற்பகல் 10.43 மணிவரை
மூலம் பிற்பகல் 04.22 மணிவரை
இராகுகாலம்-03.03-04.33மணிவரை
சுபநேரம்-10.33-12.03மணிவரை
குங்கிலியக் கலயர் குரு பூஜை
ஆவணிமூலம்

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம் ,புதிய திட்டமிடல், வீண்பயம் ,குடும்பக்கவலை |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு , திருடர் பயம் பொருள் விரயம் ,காரிய தடங்கல். |
| மிதுனம் | உறவினர்வருகை , முயற்சி கைகூடும் , நல்ல வரவேற்பு , சௌபாக்கியம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும் , நண்பர்கள் சந்திப்பு , தனலாபம் |
| சிங்கம் | குடும்பக்கவலை,காரிய இடையூறு, பணவிரயம், சொத்துப்பிணக்கு |
| கன்னி | தொழில் சிந்தை ,வாகன சுகம் , தனவிரயம் , முயற்சி தாமதம். |
| துலாம் | பிரயாண நன்மை ,மனோதைரியம் , காரிய் நன்மை , உறவினர் உதவி |
| விருச்சிகம் | வேலைச்சுமை , போசன சுகக் குறைவு ,அதிக செலவு, |
| தனுசு | வெகுமானம் , போசன சுகம் , புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | மனஸ்தாபம் , காரிய அலைச் சல் எதிர் பாராத நன்மை ,சுபசெலவு. |
| கும்பம் | பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும் , புகழ் தேக நலன். |
| மீனம் | செய்தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி, விருந்துபசாரம். |

வளவன்

## மாத்தளை நாவுல பிரதேசத்தில் 12 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

இலங்கையில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள நாவுல பிரதேசத்தில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையில் 12 தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலைமுதல் பிற்பகல் வரை நடைபெற்ற தேடுதலில் நூற்றுக்கும் அதிகமானோர் மீது விசாரணைகள் நடைபெற்றன.

இராணுவத்தினரும் காவல் துறையினரும் இணைந்து நடத்திய தேடுதலில் வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோத னையிடப்பட்டதாகஅப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

12பேரும் நாவுல காவல் நிலையத்தில் தடுத்து வைக்க ப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ஓ)

## யாழ்ப்பாணத்தில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு மையம் நிறுவப்பட உள்ளது

### அமைச்சர் டக்ளஸின் கோரிக்கைக்கு கல்வி அமைச்சர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இரண்டு வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நிலையமொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு மைய மொன்றை யாழ்ப்பாணத் தில் நிறுவுமாறு அமைச்சர் டக்ள ஸ்தேவானந்தா கோரிக்கை விடுத்திருந்தார்.

கல்வி அமைச்சரின் அனுமதியுடன் யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் திருத்தும் மையமொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தமிழ் மொழி ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆவலுடன் காத்திருப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்து ள்ளார்.(ஓ)


## செயலமர்வு

வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இம் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடியிலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இச் செயலமர்வில் மனைப் பொருளியல் பாடத்தில் கண்காட்சி போட்டி என்பன நடாத்துவது பற்றி கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

எனவே தரம் 10, 11 இல் மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.புஸ்பலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)



கெற்பேலி அருள்மிகு பார்வதி சமேத பரமசிவன் ஆலய எழுந்தருளி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.
(படம்:சாவகச்சேரி நிருபர்)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணியளவில் முருகன் அலங்காரம் என்ற பொருளில் சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசன் (ஜே.பி) பக்கவாத்திய சகிதம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## போயா ஆன்மீக நிகழ்வுகள்

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

அன்று வேதபாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பஜனை ஆகியனவற்றுடன் பாலவிகாஸ்(சிறுவர்) தின விழா நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ)

# வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வடமராட்சிக்கு திடீர் இடமாற்றம்

## -நலன்புரிக் கழகம் ஆட்சேபனை

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர், வலிகாம கல்வி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வடமராட்சிக் கல்வி வலயத்திற்கு வழங்கியுள்ள இடமாற்றத்திற்கெதிராக ஆட்சேபனை தெரிவித்து இடமாற்றத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டு செயலாளருக்கு வலயக் கல்வி அலுவலக நலன்புரிக் கழகம் முறைப்பாடு செய்துள்ளது.

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது வலயக் கல்விப் பணிப்பாளர் கடந்த நான்கு வருடங்களாக எமது பிரதேச கல்வி அபிவிருத்திக்காக பல திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி வருகின்றார். இத்திட்டங்கள் பல வெற்றிகண்டுள்ளன. இன்னும் சில முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக எமது பிரதேசப் பாடசாலை மாணவர்கள், மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற்கவும் வெற்றியீட்டவும், வழிகாட்டி வந்துள்ளார்.

எமது வலய இருமாடிக் கட்டடம் கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். பாடசாலைகளிற்கு வேண்டிய வளங்களைத் தொண்டு நிறுவனங்களிடம் பெற்றுக் கொடுப்பதில் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளார்.

மேலும், வலிகாமம் பிரதேச உயர் பாதுகாப்பு வலயத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீள இயக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார் எனவும், இராணுவ வீதி மறிப்புள்ள சூழலில், வடமராட்சிக் கல்விப் பணிமனைக்கு எமது வலயக் கல்விப் பணிப்பாளர் செய்துவருவதும், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயத்திற்கு வந்து செல்வதும், இவர்களின் கடமைக்கு பெருந்தடையாக உள்ளன என்றும் இந்த இரு இடமாற்றத்தினாலும் இரு பிரதேச கல்வி அபிவிருத்தியில் எந்தவித அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியாது எனவும், அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் காரணங்களின் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு செயலாளரிடம் முறைப்பாட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

# வணிகத்துறை பாடங்களுக்கான —எழுத்து மூலப் பரீட்சை—

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வணிகத்துறை பாடங்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் பிரிவுகளுக்கு நடாத்தப்பட உள்ளது. பொருத்தமான மாணவர்கள் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யும் பொருட்டு, தரம் 10, தரம் 11 வகுப்புகளுக்கு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா2 மாணவர்க்ள் வீதமும், தரம் 13 இல் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா 3 மாணவர்கள் வீதம் தெரிவு செய்து இம் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கல்வி முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வலய மட்டப் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தரம் 10க்கும் 11க்கும் வணிகக் கல்வி, கணக்கீடு, முயற்சியாண்மை கல்வி ஆகிய பாடங்களிலும், தரம் 13க்கு கணக்கீடு , வணிகக்கல்வி, பொருளியல் உட்பட வணிகத் துறைப் பாடங்களிலும் வினாக்களைக் கொண்டு வணிகப் போட்டி நடைபெறும்.

வினாக்கள் யாவும் பல்தேர்வு வினாக்களாக அமைந்திருக்கும் என வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) மு. புஷ்பலிங்கம் அறிவித்துள்ளார் . (ஓ-19)

# தென்மராட்சிப் பிரதேச திண்மக்கழிவுகள் சரசாலை வெளியில் கொட்ட அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை மட்டும் சரசாலை வெளியில் கொட்டுவதற்கு சாவகச்சேரி பிரதேச சபையால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சாவகச்சேரி பிரதேச சபையில் பணம் கட்டி அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் சிறிய வாகனம் ஆயிரம் ரூபா, பெரிய வாக னம் ஆயிரத்து ஐந்நூறு ரூபா என்ற ரீதியில் அறவிடப்படவுள்ளது.

யாழ்.செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் தனியார் நிறுவன கழிவகற்றும் வாகனங்களை இதற்காக மக்கள் பயன்படுத்தலாம் என தென்மராட்சிப் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சிப் பிரதேச கழிவுகள் முள்ளி வெளியிலும் வலிகாமம் கழிவுகள் கல்லுண்டாய் வெளியிலும் திண்மக் கழிவுகளைக் கொட்ட யாழ்.செயலகத்தால் இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

# தொண்டு நிறுவனங்கள் இவர்களுக்கும் கற்கை வசதியளிக்க முன்வருவார்களா?

இந்த நூற்றாண்டிலும் இணையம் என்றால் என்ன என்று தெரியாத இளம் சமுதாயம் எங்காவது உள்ளதா? இருக்கிறார்கள்.

கோண்டாவில் வடகிழக்கு பிரதே சத்தில் அமைந்துள்ள ஞான ஒளி சனசமூக நிலையப் பகுதிதான் நாம் குறிப்பிடும் பிரதேசம்.

"செம்பாடு" என செல்லமாக குறிக்கப்படும் 30-40 வரையான குடும்பங்களைக் கொண்ட இப் பகுதியில் வெளிநாட்டு தொடர்புள்ள ஒரு சில குடும்பங்கள் தவிர்ந்த ஏனையோர் அன்றாடம் காய்ச்சிகள், அரச உத்தியோகத்தர்கள் ஓரிருவரே. அரச நிவாரணத்தை நம்பியிருக்கும் ஏழைத் தொழிலாளிகள் வீட்டுப் பெண்கள் கூட விவசாயக் கூலிக்கு செல்வதை காணமுடிகின்றது.

1999ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜி.ரி.சற் நிறுவனம் அமைத்துக் கொடுத்த வீடுகள் மூலமாகவே கல்வீட்டைக் கண்ட இவர்களுக்கு காலாகாலமாக தொடரும் கல்வி பற்றிய விழிப்புணர்வு இன்மையால் இன்றைய உலகுடன் இணைய முடியாத அவலம் றோ.க.த.க. பாடசாலை, பரஞ்சோதி வித்தியாசாலைக்கும் இடையில் இப் பகுதி அமைந்திருந்தாலும் இடைவிலகுவோர், பாடசாலை செல்லாதோர் தொகை அதிகம்.

கல்விப் புலம் இன்மையால் இளவயது திருமணங்கள் அதிகரிப்பதுடன், இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்புக்களும் அற்றும் போயிருக்கின்றன. சனசமூக நிலையத்தில் இயங்கி வரும் முன்பள்ளி சில காலங்களில் இயங்கும். சில வேளைகளில் இயங்காமலும் இருக்கும்.

இவ்வளவிற்கும் இப் பகுதி மக்கள் தாம் பெறாத கல்வியை தம் பிள்ளைகள பெற வேண்டும் என துடிப்பினும் சமூக, பொருளாதாரப் பின்னணி இடம் கொடுப்பதாயில் லை. இப் பகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை கல்வி மூலமாகவே முன்னேற்ற முடியும்.

"அன்னயாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பதற்கு எடுத்துக்காட்டாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இப் பகுதி மக்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைக்க வேண்டும். (ஓ-36)





வேலணைப் பிரதேச செயலக பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வேலணைப்பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றபோது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதிநிதி சூசைப்பிள்ளை அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்), ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் காந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கழகங்களுக்கு விளையாட்டு உபரணங்கள் வழங்குவதை முதலாவது படத்திலும், தென்னை பனை அபிவிருத்திச் சபையின் வெல்லம் தொழிற்சாலைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர்கழகம் மற்றும் வடமராட்சி கல்விச் சமூகம் ஆகியன இணைந்து நடாத்தும் C.C.I.Y. பிசினஸ் பாடசாலை நாளை புதன்கிழமை பருத்தித்துறை ஆத்தியடி கல்லூரி வீதியில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இளைப்பாறிய கணக்காளர் கே.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார் என முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராஜா அறிவித்துள்ளார். (ஓ-19)

# நோத் முதல் கோபல்லவா வரை 93



## ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்

இற்றைக்கு ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பின்னாக இலங்கை முழுவதும் ஒரு தேர்தற்றொகுதியாய் இருந்தது என்றும், அதன் தெரியப்பட்ட பிரதிநிதியாய் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இருந்தார் என்றும் நினைக்கும்போது அக்காலத்தில் இருந்த தேசியத் தன்மையை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்கவியலாது.

ஆள்பதி பிளாக் அவர்களுக்குப் பின்னர் சேர் ஹென்றி மக்கலம் அவர்கள் 1907 ஆம் ஆண்டில் ஆள்பதியாய் நியமிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தார். இவர் மலாயாவின் பல பாகங்களிலும் எஞ்சினியர் பதவியைச் சிறப்புடன் வகித்துச் சேவை செய்த ஓர் அறிவாளியாவார். இவருக்கு உதவியாக இலங்கையில் சேர் கிளிபோட் அவர்கள் பிரதம செயலாளராய் இருந்தார். இவர்கள் காலத்திலே இலங்கைச் சட்டசபை

மீள் பார்வை

ஓய்வு நேரங் கிடைத்தது. பொதுநலத் தொண்டு செய்தல் வேண்டும் எனப் பெரியவர்கள் விரும்பினார்கள். இந்தியாவின் முன்னேற்றத்தைக் கண்ட மக்களின் பொது அபிப்பிராயம் முன்னேற்றத்தை விரும்பியது.


இக்காலத்திலே தான் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்துக்காக கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் அரும்பாடுபட்டார்கள். கோகலே அவர்களே தமது குரு வென்று மகாத்மாகாந்தி போற்றி வந்தார்.



மலாயர் (ARNOLD WRIGHT)



இஸ்லாமியர் (ARNOLD WRIGHT)



கண்டியச் சிங்களவர் (ARNOLD WRIGHT)



சிங்களவர் (ARNOLD WRIGHT)

இராமநாதன் அவர்களுக்குக் கண்டிச் சிங்களவர், கரைநாட்டுச் சிங்களவர், சோனகர், மலாயர் ஆகிய சாகியத்தார் அனைவரும் இன மத வேறுபாடு கருதாமல் இலங்கையர் எனக் கருதியே வாக்களித்தார்கள் என்ற கருத்தை எவரும் என்றேனும் மறுக்கவோ மறைக்கவோ மறக்கவோ இயலாது. அவரும் இலங்கை முழுவதுக்கும் அசல் பிரதிநிதி யாயே அரிய தொண்டாற்றினார்.

யிலே திருத்தங்கள் நல்ல முறையில் உடனடியாக ஏற்படுதல் வேண்டுமெனக் கோரி இலங்கையர் கிளர்ச்சி செய்வாராயினர்.

சட்டசபையில் திருத்தம் ஏற்படல் வேண்டும் எனக் கிளர்ச்சி எழுந்தமைக்குப் பல காரணங்கள் நிலவின. கல்வித்தரம் உயர்ந்து மக்கள் சிந்திக்கத் தொடங்கினர். செல்வம் அதிகரித்தமையால் அவர்களுக்கு ஆறுதல்

இத்தாலிக் குக் கவுண் கேவர், இந்தியாவுக்கு கோகலே என்றே அரசியற் பிரமுகர்கள் கருதினர். கோகலே அவர்கள் இந்தியாவுக்கு நல்லர சாங்கம் வேண்டும் என்றே முதலில் கிளர்ச்சி செய்தார்.

கோகலே அவர்களின் கருத்தின் வண்ணம் நல்லரசாங்கம் என்றால் அது அரசின் பல்வேறு உறுப்புக்களான ஸ்தாபனங்கள் சட்டப்படி தன் தன் கடமைகளைச் சரிவரச் செய்தல், பொதுத் தேவைகளின் பொருட்டுச் சிக்கனமாகப் பணஞ் செலவு செய்தல், வரி விதிக்கும் போது இயன்றளவு குறைத்து விதித்தல், பொதுசன அபிப்பிராயத்திற்கு மதிப்புக் கொடுத்தல், மக்களின் முன்னேற்றத்துக்காவன செய்தல், மக்களின் முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியுஞ் செய்தல் என்பனவும் பிறவுமாம்.


கோகலே அவர்களுடைய வசனத்தில் கூறினால் "நான் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் எதிர்காலத்தில் உள்ள சுதந்திரத்தை உடனடியாகக் கையில் தரும்படி ஆங்கி லேயரைக் கேட்கவில்லை.

" நான் கேட்பது முன்னேற்றப் பாதையில் ஓரடி முன்வைக்க அனுமதியுங்கள் என்பதே" சுதந்திரம் நெடுந் தூரத்தில் இருப்பதாக வும் அதன் பாதை வழியே

க.சி.குலரத்தினம்

ஆறுதலாகச் சென்றே அதனை அடைய வேண்டும் என்றும் கோகலே அவர் கள் கருதினார். அவர் சென்னையில் 1908 ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மகாநாட்டில் தலைமை தாங்கிப் பேசியது பொறுப்புள்ள தொடர்பை முதலில் பெற்று அதன் வழியாகப் பரிபாலனப் பொறுப்பைப் பெறவேண்டும் என்பதே. (தொடரும்)

# பூர்வீக நிலத்தையும் பாரம்பரியத்தையும் இழந்து நிற்கும் இலங்கையின் ஆதிக்குடிகளான 'வன்னியலா -எத்தோ'



ஆனால் தற்போதைய சூழ்நிலை வேறு. குறிப்டாக மஹியங்கனை- தம்பனா பகுதியில் வசித்து வரும் சுமார் 375 வன்னியலா-எத்தோ குடும்பங்கள் அக்கம் பக்கம் உள்ள சிங்கள-மக்களை தங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் இப் பகுதியில் இவர்களுக்கு விவசாயம் செய்ய சிறு நிலப் பகுதிகளையே ஒதுக்கியுள்ளது. உருவரிகே வன்னியலா - எத்தோவின் இளைய மகனான உருவரிகே குணபன்டிய லட்டோ கூறும் போது,

"காடுகளில் வேட்டையாடும் போது எமக்குத் தேவையானது எதுவோ, எவ்வளவோ அவற்றை மட்டுமே வேட்டையாடுவோம். தேன் சேகரிப்பு, மருத்துவ மூலிகைகளைக் கண்டறிதல் என்பன இதில் அடங்கும். ஒரு குடும்பம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையே வேட்டையில் ஈடுபடும்.

நாம் வனாந்தரத்தில் சமநிலையைப் பேணினோம். ஆனால் இப்போது அப்படியல்ல. எங்களை காடுகளில் இருந்து வெளியேற்றிவிட்டனர். வெளியாட்கள் காடுகளில் நுழைந்து இஷ்டத்திற்கு மிருகங்களை வேட்டையாடுகின்றனர். இப்போது பல மிருகங்கள் எண்ணிக்கையில் குறைந்துவிட்டன.

ஆகையால் தற்போது காடுகள் பாதுகாக்கப்பட்டு விட்டன. இந்நிலை எமக்கு புரிகிறது. ஆனால் எமது மூதாதையர் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக எப்படி காடுகளின் சமநிலையைப் பேணிப் பாதுகாத்து வந்தனர் என்பதை சிந்திக்கவேண்டும். அது எமக்கு மட்டுமே தெரியும். ஏன் இப்போது வரை கூட அது எம்மால் மட்டுமே முடியும். காட்டு வள திணைக்களமும் அரசாங்கமும் இது தொடர்பில் எங்களது உரிமையையும் நினைவு கூர்தல் அவசியம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்போதும் கூட வன்னியலா-எத்தோ இனம் பற்றி கேள்வியுறும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அவர்களைக் காண மஹியங்கனை-தம்பனா பகுதிக்குச் செல்கின்றனர். ஆனால் சோகமான விடயம் என்னவெனில்,

இவ்வின சிறார்கள் தமது பாரம்பரிய பாடல்களைப் பாடி வருவோரிடம் பணம் கேட்கும் நிலையில் இவர்களது வாழ்க்கை நிலையில் உள்ளது.

இவர்களின் இப்போதைய தலைமுறையினருக்கு கல்வி போதிப்பதில் அரசாங்கம் திட்டங்களை முன்னெடுத்தாலும் அது தமது பாரம்பரியங்களை பாதிக்காது என்கிறார் குணபன்டியாலட்டோ-எத்தோ இன்னும் பல மாற்றங்கள் வரக்கூடும். எது எப்படியானாலும் எங்களது நம்பிக்கைகள், பாரம்பரியங்களை நாம் இளைய தலைமுறையினருக்கு போதித்து வருகின்றோம்.

-சிவலிங்கம் சிவகுமாரன்

எம் மதத்தில் பலர் பாடசாலை செல்கின்றனர். சிலர் உயர்கல்வி கற்கும் தகுதி பெற்றவர்கள் எப்படியிருந்தாலும் அவர்கள் மறுபடி வந்து எம்மோடு இணைந்து பாரம்பரியங்களை முன்னெடுத்துச் செல்லவே தயாராகவுள்ளனர் என்று நம்பிக்கையோடு அவர் தெரிவிக்கின்றார்.

1983 ஆம் ஆண்டு மாதுறுஓயாத் திட்டத்தின் பின்னர் மாதுறுஓயா தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து இவர்கள் பலவந்தமாகவே வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் அவர்களுக்கு அதன் உள்ளே நுழையவும் வேட்டையாடவும் அனுமதி மறுக்கப்பட்டது. உள்ளே செல்ல வேண்டுமானால் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரத்தை இவர்கள் பெறவேண்டும்.

1998 ஆம் ஆண்டு இவர்களில் சிலருக்கு மாதுறு ஓயாப் பகுதிக்குள் உட்செல்லவும் ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பில் வேட்டையாடவும் அனுமதி கிடைத்தது. அனுமதிப் பத்திரம் இல்லாது நடமாடியவர்கள் பலர் வன பாரிபாலன சபை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டனர்.

இதைவிட சோகம் என்னவெனில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் வைத்திருந்த மூன்று வன்னியலா-எத்தோ இனத்தவர் தேசிய பூங்கா காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பல வன்னியலா - எத்தோ தமது பூர்வீக நிலங்களுக்கு (காடுகளுக்கு) திரும்பவே விரும்புகின்றனர்.



### வன்னியலா -எத்தோ பாடல் ஒன்று

"போரி போரி செல்லம் -செல்லம் பெடோ வன்னியா,
பெலதலவ நவின்னா-பிட்ட கொசின் வெட்டன்னே,
மல்பிவெலி கெனகெனே- ஹெல கடோ நாவின்னே,
தியபி வெலி கெனகெனே- திகே போஹலிஸ்கொடேபெனி,
கா தோ இபல் தென்னே"

இதன் அர்த்தம்: உயர்ந்த மலைப் பிரதேசத்தில் பூக்களின் மகரந்தத்தையும் தேனையும் உறிஞ்சி எடுக்கும் தேன்பூச்சி, தேன்கூட்டை அமைக்கிறது. தேன் இல்லாத தேன் இராட்டை அப்பூச்சிக்கு வலி கொடுத்து சேதப்படுத்த வேண்டாம். அதில் பயனில்லை.

சிங்களக் குடியேற்றங்களுக்கு அண்மித்ததாக வாழ்க்கையை நடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ள இவர்கள் தமது இனம் தலைமுறையினர் குடிப் பழக் கத்திற்கும் ஏனைய கெட்ட சகவாசங் களுக்கும் உட்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகக் கூறுகின்றனர். (முற்றும்)

# பாகிஸ்தானின் புதிய அதிபரான சர்தாரி பதவியில் தாக்குப்பிடிப்பாரா?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஆசிப் அலி சர்தாரி பணி மிகவும் சிரமமானது அவர் நாட்டின் 12ஆவது அதிபரானாலும் அமெரிக்கக்கட்டுப்பாட்டில் இயங்குவதுடன் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவருக்கு இப் பொறுப்பு பெரும் சவாலாக இருக்கும் என்று கூறப்படுகிறது.




பாகிஸ்தான் அதிபராக இருந்த முஷாரப் பதவிவிலகியதை அடுத்து புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் சனிக்கிழமை நடந்தது. இந்தத் தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் ஆசிப் அலி சர்தாரியும் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் முன்னாள் தலைமை நீதிபதி சயித் உஸ்சாமன் மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (க்யூ பிரிவு) சார்பில் முஷாஹித் உசேன் சயீதுவும் போட்டியிட்டனர். பாராளுமன்றத்தின் இரு சபைகளில் உள்ள 436 வாக்குகளில் சர்தாரிக்கு 281 வாக்குகள் கிடைத்தன. நவாஸ் கட்சி வேட்பாளர்சயித் உஸ்சாமனுக்கு 111 வாக்குகளும் எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (க்யூபிரிவு) வேட்பாளர் முஷாஹித் உசேனுக்கு 34வாக்குகளும் கிடைத்தன. எதிர் பார்த்தது போல ஆசிப் அலி சர்தாரி வெற்றி பெற்றார்.

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலைசெய்யப்பட்ட பின் அந்நாட்டு அரசியலுக்குள் நுழைந்த அவரது கணவர் சர்தாரி தற்போது அதிபர் பதவியைப் பிடித்துள்ளார். பொதுவாக சர்வாதிகாரிகள் அதிபராக ஆவது அல்லது இராணுவத் தளபதிகள் அதிபராவது என்ற நிலை தற்போது மாறியிருக்கிறது. அதே சமயம் பாராளுமன்ற அதிகாரத்தில் தலையிடாமல் செயற்படும் அதிபராக இருப்பதாக அவர் உறுதிய ளித்திருக்கிறார். சர்தாரி பதவியேற்ற பின் அவருக்குக் கீழே பாகிஸ்தானில் முப்படைகளும் செயல்படும் விதம் எப்படியிருக்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

பாக் அதிபர் தேர்தலில்சர்தாரிக்கு எதிராக நவாஸ் ஷெரீப் தனது கட்சி சார்பில் வேட்பாளரை நிறுத்தினார். இருப்பினும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் சர்தாரி வெற்றி பெற்றார். 53வயதான சர்தாரி பெனசீர் பூட்டோபிரதமராக இருந்த காலத்தில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானார். பின் 111ஆண்டுகள் சிறையில் இருந்தார் இருப்பினும் அரசியல் பகை காரணமாக அவர் மீது பழி சுமத்தப்பட்டதாகக் கூறியதால் இந்த குற்றம் நிரூபிக்கப்படவில்லை. நீண்ட காலம் சிறையில் இருந்ததால் நினைவுத் திறன் குறைந்து விட்டது என்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதின.

இன்று அவர் பெனாசிர் வழியில் அவர் தந்தை பூட்டோ வழியில் ஜனநாயக ஆட்சியைத் தருவேன் என்கிறார். அதிபராக சர்தாரி வெற்றி பெற்றுள்ளதன் மூலம் பங்குச் சந்தையில் எதிர்பார்க்கும் மாற்றம் ஏற்படுவதுடன் ரூபாய் மதிப்பும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதாக முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் வர்த்தகரான ஆசிப் அலி சர்தாரி இனி அரசியல் வாதி தோற்றத்துக்குமாற வேண்டும். பயங்கர வாதம் தாண்டவமாடும் பாகிஸ்தானில் அதை கட்டுப்படுத்த வேண்டும் என அமெரிக்கா அதிகமாகவே எதிர்பார்க்கிறது. இந்த எதிர்பார்ப்பை உடனடியாக செயல்படுத்தவேண்டிய நிலையில் சர்தாரி உள்ளார்.

கடந்த ஆறு மாத காலமாக காணப்பட்ட அரசியல் குழப்பத்தாள் அந் நாட்டு பொருளாதார நிலை மோசமடைந்துள்ளது. அதை சீர் திருத்த வேண்டியமற்றொரு பொறுப்பும் சர்தாரிக்கு உள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் அமெரிக்கா, பாகிஸ்தான் விவகாரத்தில் அதிகமாக தலையிடுவதை பழமைவாத அரசியல் வாதிகள் விரும்ப வில்லைஅவர்களையும் சமாதானப் படுத்த வேண்டிய இக்கட்டான நிலையில்சர்தாரி உள்ளதாக டான் உள்ளிட்ட பத்திரிகைகள் கருத்து தெரிவித்துள்ளன. (ஓ)

## கியூபாவை மீண்டும் புயல் தாக்கியதில் 78 பேர் பலி




அமெரிக்கா அருகில் உள்ள கியூபா நாட்டில் சமீபத்தில் இரு புயல்கள் தாக்கி யுள்ள நிலையில் மீண்டும் அங்கு புயல் தாக் கியது.

ஐக் எனப் பெயரிடப்பட்ட இந்தப் புயல் அதிகாலை நேரத்தில் கியூபாவின் வட பகுதியை தாக்கியது. அப்போது பலத்த மழை பெய்தது. மணிக்கு 125 மைல் வேகத்தில் பயங்கர சூறைக்காற்று வீசியது. இதில் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. பெரிய பெரிய மரங்கள் வேரோடு சரய்ந்து விழுந்தன. புயல் வீசலாம் என்று எதிர்பார்த்ததால் அங்கு மூன்று இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் பாதுகாப் பான இடங்களுக்கு அப்புறப் படுத் தப்பட்டனர். இருந்தாலும் புயல் மற்றும் மழையால் 78 பேர் பலியாகியுள்ளனர்.

அடுத்ததாக இந்தப் புயல் அமெரிக் காவில் புளோரிடா லூசியான பகுதியை தாக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது இதனால் அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை கியூபா அருகே உள்ள ஹெய்ட்டி மற்றும் துர்க் தீவு ஆகியவற்றை புயல் தாக்கியதில் 800ற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஹரிக்கேன் ஐக் சூறாவளி தாக்கியதால் கரீபியன் தீவுகளில் பாரியசேதம்

கரீபியன் தீவுகளை ஹரிக்கேன் ஐன் சூறாவளி தாக்கியமையால் பாரியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சூறாவளி காரணமாக தேர்க்ஸ் கைகோஸ் தீவுகளில் 80 வீடுகள் சேத மடைந்துள்ளதாக குறிப்பிட்ட அந்த தீவுகளின் பிரதமர் மக்கள் தங்குமிட வசதிகளின்றி கஷ்டப் படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மிகவும் பயங்கரமான வகை நான்கைச் சேர்ந்த சூறாவளியான ஹரிக்கேன் ஐக் மணிக்கு இரு நூறு கிலோ மீற்றருக்கம் அதிகமான வேகத்துடன் தாக்கியதில் தாழ்வான. பகுதிகளே முதலில் பாதிக்கப்பட்டன.

இந்த சூறாவளி காரணமாக கரீபியன் பிராந்தியத்தின் பெரும்பாலான பகுதிகளில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ)

## எகிப்தில் பாறைகள் உருண்டு விழுந்ததில் 500 பேர் வரை புதைவு 31 சடலங்கள் மீட்பு

(கெய்ரோ)

எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அண்மையில் ஏழை மக்கள் குடியிருந்த குடிசைகள் மீது பாரிய பாறைகள் உருண்டு விழுந்ததில் 500க்கு மேற்பட்டவர்கள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தையடுத்து 31 பேர் இதுவரை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இடிபாடுகளின் கீழ் சிக்கியுள்ள ஏனைய நூற்றுக் கணக்கானோரை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆபிரிக்காவின் அதி சனத்தொகை கூடிய பிராந்தியங்களில் ஒன்றாக மேற்படி புற நகர்ப் பகுதி விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



சுமார் 8 இராட்சதப் பாறைகள் உருண்டு விழுந்ததில் 50க்கும் அதிகமான வீடுகள் புதையுண்டுள்ளதாக மேற்படி பிரதேச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் அலட்சியப் போக்கே இந்த அனர்த்தத்திற்கு காரணமென பிரதேச வாசிகள் குற்றஞ் சாட்டுகின்றனர். மேற்படி செங்குத்து பாறைகள் எச்சமயமும் விழலாம் என அப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பல தடவைகள் எச்சரிக்கை விடுத்தும் அப் பிரதேச வாசிகளை புதிய பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த அரசாங்கம் தவறியதாகக் கூறப்படுகிறது.

புனித ரம்ழான் நோன்பை முன்னிட்டு அதிகாலை வேளையில் தமது தொழுகைக் கடமைகளை முடித்து மக்கள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (ஓ)

## அமெரிக்காவில் வேலை இல்லாப் பிரச்சினை தீவிரமடைந்துவருகிறது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பல்வேறு நிறுவனங்களில் கடந்த மாதத்தில் மட்டும் 84 ஆயிரம் பணியிடங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன அமெரிக்காவில் வேலையில்லா பிரச்சினை தீவிர மடைந்து வருகிறது.

ஒரே மாதத்தில் 84 ஆயி ரம் பேர் வேலையிழந்துள்னர். இதைத் தொடர்ந்து அமெரிக்காவில் வேலை இல்லாமல் இருப்போர் 6.1 சதவீதமாக அதிகரித்துள்ளது .பண்ணை அல்லாத பணிகளுக்கான சம்பள இடங்களை தொழிலாளர் துறை தொடர்ந்து குறைந்து வருகிறது. இதனால் தனியார் துறைகளில் வேலை பார்த்தவர்களை விட இவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். மேலும் 75 ஆயிரம் பணியிடங்கள் ரத்து செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ)

## ஐந்து வருடங்களின் பின் உயிருடன் மீண்ட அதிசயம்

(லண்டன்)

5 வருடங்களுக்கு முன் மரணச் சடங்கு



நடத்தப்பட்டு புதைக்கப்பட்ட ஒருவர் திடீரென உயிருடன் மீண்டு வந்த அதிசய சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

மான்செஸ்ட்ரைச் சேர்ந்த ஜோன் டெலானி என்ற இந்த நபர் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காணாமல் போனார். அதன் பின் மூன்று வருடங்களுக்கு பின் அவரது உடல் என அடையாளங்காணப்பட்ட உருக்குலைந்த சடலத்தை அவரது குடும்பத்தவர் முறைப்படி மரணச் சடங்கு செய்து புதைத்தனர்.

இந் நிலையில் காணாமல் போனவர்கள் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தோன்றிய ஜோன் டெலானியைப் பார்த்து அவரது குடும்பத்தினருக்கு இன்ப அதிர்ச்சி. தலையில் அடிபட்டதால் ஏற்பட்ட காயம் காரணமாக தனது பெயர் ,முகவரி, குடும்பம் அனைத்தையும் மறந்த நிலையில் மருத்துவமனையொன்றில் ஜோன் டெலானி (71 வயது) அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது மகனானஜோன் ரெனேஹன் (42 வயது) மரபணு பரிசோதனை மூலம் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளவர் தனது தந்தையே என உறுதிப்படுத்தி அவரை மீண்டும் தமது குடும்பத்தவருடன் இணைத்துக்கொண்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் ஜோன் ரெனேஹறன் விபரிக்கையில் ,

நல்லடக்கம் செய்யப்பட்ட எனது தந்தையை உயிருடன் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பார்த்தபோது என் கண்களை என்னாலேயே நம்ப முடியில்லை எனக் கூறினார். (ஓ)

## உலக தரிசனம்

## இயற்கை அனர்த்த எச்சரிக்கை செய்மதிகளை வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது சீனா

(பீஜிங்)


சீனாவானது இயற்கை அனர்த்தங்கள் ஏற்படப் போவதை முன்கூட்டியே துல்லியமாக கணித்து எச்சரிக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப கருவிகளை உள்ளடக்கிய இரு செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியுள்ளது.

மேற்படி இரு செயற்கைக் கோள்களும் சீனாவின் ஷொங்ஸி மாகாணத்திலுள்ள தைவான் செயற்கைக் கோள் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டன.

வெள்ளம், வரட்சி, நிலநடுக்கம், பயிர்களைத் தாக்கும் தொற்று நோய்கள் உட்பட இயற்கை அனர்த்த நிலைகளை முன் கூட்டியே கணித்து எச்சரிக்கை செய்யும் வல்லமை கொண்ட இந்த செயற்கை கோள்களானது சுற்றுச் சூழலை பாதுகாப்பதிலும் பங்களிப்பு செய்யவுள்ளதாக சீன விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சீனாவில் ஆண்டுதோறும் சூறாவளி, புயல், வெள்ளம் மற்றும் வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்து வருகின்றனர். மேலும் இந்த அனர்த்தங்களால் பாரிய பொருளாதார இழப்பையும் சீனா சந்தித்துள்ளது. கடந்த மே மாதம் தென்மேற்கு சீனாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுமார் 80 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# நாரிப்பிடிப்பு வராது தடுப்பது எப்படி?



நாரிப்பிடிப்பைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பார்ப்போம்.

உங்கள் நாளாந்த வேலைகளின் போது சற்றுக் கவனமாக இருந்தால் அதனைத் தடுக்கமுடியும். ஒரு பொருளைத் தூக்க வேண்டுமாயின், தூக்க இருக்கும் பொருளின் பாரம் உங்கள் சக்திக்கு மேற்பட்டதெனில் அதனைத் தனியே தூக்க முற்பட வேண்டாம். உதவிக்கு ஒருவரை அழையுங்கள். தரையிலிருந்து ஏதாவது பொருளை எடுக்க வேண்டுமாயின் அதனைக் குனிந்து எடுக்கவேண்டாம். பாரமான பொருட்கள்ளஎன்றல்ல, பாரமற்றபென்சில்போன்ற பொருட்களாக இருந்தாலும் கூட முதற் படத்தில் காட்டியவாறு முதுகை வளைத்துக் குனிந்து எடுப்பதைத் தவிருங்கள்.

மாறாக இரண்டாவது படத்தில் காட்டியவாறு கால்களைச் சற்று அகட்டி வைத்து பாதங்கள் தரையில் பொறுத்திருக்குமாறு நின்ற பின் முதுகு வளையாதவாறு, முழங்கால்களை மடித்து உட்கார்ந்து எடுங்கள். அவ்வாறு எ்டுக்கும் போது அல்லது தூக்கும்போது முதுகை வளைக்காதிருப்பதுடன் பொருளை நெஞ்சுக்கு அருகே வைத்துத் தூக்குங்கள். இவ்வாறு தூக்கும்போது முதுகை பக்கவாட்டிற்கு ஆட்டி அசைந்து திருப்பாமல் இருப்பதும் முக்கியமாகும்.

ஒரு பாரமான பொருளை, உதாரணத்திற்கு அலுமாரியை நகர்த்த வேண்டிய அவசியம் நேர்ந்தால் அதனைக் கைகளால் இழுப்பதைத் தவிர்தது முதுகுப் புறத்தால் தள்ளி நகர்த்த முயற்சியுங்கள்.

உட்காரும்போது உயரம் குறைந்த கதிரைகளில் உட்காருவதைத் தவிருங்கள். சாப்பாட்டு மேசைக் கதிரைகள் போன்றவை பொதுவாக சரியான உயரம் கொண்டவையாகும்.

உட்காரும்போது உங்கள் முதுகு எவ்வாறு இருக்கவேண்டும். "வளைந்து உட்காராதே முதுகை செங்குத்தாக நிமிர்த்தியபடி உட்காரு" என்றே பெற்றோர்கள், பாடசாலைஆசிரியர்கள்முதல் ஆன்மீகவாதிகள் வரை ஆலோசனை கூறுகின்றார்கள்.

ஆனால் இப்பொழுது அபர்டீனிலுள்ள வூட்என்ட் வைத்தியசாலையில் (Woodend Hospital in Aberdeen) எம்.ஆர்.ஐ ஸ்கான் உதவியுடன் செய்யப்பட்ட ஆய்வு அதனை மறுதலிக்கிறது. மேசையை நோக்கி முன்பக்கமாக வளைந்து உட்கார்வதானது முள்ளந்தண்டின் கீழ்ப்புறத்தில் தேய்மானத்தை ஏற்படுத் தும் . நிமிர்ந்து உட்காருவது முள்ளெலும்புகளில் கூடிய அழுத்தத்தை கொடுத்து அவற்றின் நேர் ஒழுங்கையே குறைத்து விடுவதாகக் கூறு கிறார்கள்.

இடைப்பட்ட நிலையில் உட்காருவதே முள்ளெலும்புகளுக்கு குறைந்தளவு பாதிப்பை ஏற்ப டுத்தும் என்கிறார்கள். மனித உடலானது நீண்டநேரம் நிமிர்ந்து உட்காருவதற்காக அமைக்கப்பட்டது அல்ல. ஆனால் இன்றைய வாழ்க்கை முறை அதையே செய்ய வைக்கிறது. எனவே நாம் நீண்டநேரம் உட்காருவதால் முள்ளெலும்புகளுக்கான பாதிப்பை குறைக்க வேண்டுமாயின், சற்று சாய்ந்த நிலையில் அதாவது 135 பாகை பின்புறம் சாய்ந்து உட்காருவதே சிறந்தது.

வேலை செய்யும்போதோ அல்லது பிரயாணம் செய்யும்போதோ அல்லது நீண்ட நேரம் தொடர்ந்து ஒரே நிலையில் உட்கார்வது முதுகெலும்பிற்கு அதீத அழுத்தத்தைக் கொடுக்கும். அந்நேரங்களில் மணித்தியாலத்திற்கு ஒரு முறையாவது சற்று எழுந்து நின்று தசைகளை நீட்டி நிமிர்த்தி அவற்றிற்கு ஓய்வு கொடுங்கள். அதேபோல கார் ஓட்டும்போது





உங்கள் ஓட்டுனர் ஆசனத்தின் முதுகு சாய்க்கும் பகுதியானது பதினைந்து பாகையளவு பின்புறம் சாய்ந்திருக்கும்படி ஒழுங்கு படுத்த வேண்டும். கைகள் தளர்வாக இருப் பதுடன் ஸ்டியரிங்கை இறுகப் பற்றுவதை யும் தவிர்க்க வேண்டும். உங்கள் டிரைவிங் சீட்டை சற்று முன்னுக்கு நகர்த்தினால் இது சாத்தியமாகும்.

முதுகை முன்புறம் வளைத்து, ஸ்டியரங்கை நோக்கிக் கூனிக் கொண்டிருப்பது போலஅமர்ந்துகார்ஓட்டுவதைத்தவிருங்கள்.

மேசையருகே உட்கார்ந்து எழும் போது முதுகை முன்பக்கமாக வளைந்து சரிந்திருப்பது கூடாது. கதிரையை மேசைக்கு அருகில் நகர்த்தி வைத்தால் முதுகு வளையாது. உட்காருவது பற்றிக் கூறியதற்கு இணங்க நிமிர்ந்திருந்து அல்லது சற்று பின்புறம் சாய்ந்திருந்து எழுதுங்கள்.

## டாக்டர் எம்.கே.முருகானந்தன்

பொதுவாக குதிஉயர்ந்த காலணிகளை அணிவதைத் தவிருங்கள். ஒரு அங்குலத்திற்குக் குறைவான உயரமுள்ள குதிப் பகுதியுள்ள காலணிகள் நாரிப்பிடிப்பைத் தடுப்பதற்கு நல்லதெனக் கூறுகிறார்கள்.

தினசரி உடற்பயிற்சி செய்வதும், எடையை அதிகரிக்காது பேணுவதும் நாரி வலி ஏற்படாது தடுப்பதில் பங்களிக்கும்.

நீங்கள் மரக்கறி வெட்டும்போது, தேங்காய் துருவும்போது அல்லது உடைகளை அழுத்தும் போது (Ironing) ஒரே இடத்தில் நீண்டநேரம் நிற்க நேரிடும். இது முள்ளந் தண்டிற்கு கூடிய வேலைப்பளுவைக் கொடுக்கும். இதைத் தடுப்பதற்கு ஒரு காலை அரை அடியுள்ள பலகையில் உயர்த்தி வையுங்கள். ஒரே காலை தொடர்ந்து உயர்த்தி வைக்க வேண் டாம். 5முதல் 10 நிமிடங்களுக்கு ஒரு முறை கால்களை மாற்றி உயர்த்தி வைக்கவும். இதனால் முள்ளந்தண்டிற்கான கூடிய வேலைப் பளு குறையும்.

சாதாரண நேரங்களில் நிற்கும் போது உங்கள் உடலானது நேராக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். அதாவது காது, தோள் மூட்டு, இடுப்பு மூட்டு ஆகியன ஒருநேர்கோட்டில்அமைய வேண்டும். தொந்தியை முன்புறம் தொங்க விட்டு, முதுகை வளைக்காது வயிற்றின் தசைகளை இறுக்கமாக வைத்திருந்தால் முதுகும் நிமிர்ந்து சரி யான தோற்றத்தில் நிற்க உதவும்.

### படுப்பதுவும்

நாம் தினமும் தொடர்ந்து ஒரே இடத்தில், ஒரே நிலையில் தொடர்ந்திருப்பது தூங்கும் போதுதான். சராசரியாக 6 முதல் 8மணி நேரம் படுக்கையில் செல வழிக் கிறோம்.

எனவே அந்தளவு நேரமும் எமது முள்ளந்தண்டானது அழுத்தம் இன்றி தளர்ச்சியாக இருப்பது அவசியம். அதாவது பகல் வேளையில் நிமிர் ந்து நிற்கும் போது எவ்வாறு முள்ளந்தண்டின் இயல்பான வளைவுகள் பேணப்படுகின் றனவோ அவ்வாறே படுக் கையிலும் பேணப்பட வேண் டும். இதற்கு எற்ற வகையில் படுக்கையும் தலைய ணையும் அமைய வேண்டும்.

சரியான படுக்கையானது வெறும் தரையோ, வெறும் படுக்கையோ அல்ல. அதே போல தளர்ச்சியான ஸ்பிரிங் உள்ள கட்டில்களோ சாக்குக் கட்டில்களோ போன்றவையும் அல்ல. எமது உடலின் இயற்கையான வளைவுகளை பேணத்தக்களவு மிருதுவான படுக்கையே ஏற்றது. உதாரணமாக பலகைமேல் சற்று இறுக்கமான மெத்தை போட்ட படுக்கை பொருத்தமாக இருக்கும்.

தலையானது உங்கள் தலைப் படுக்கைக்கும் இடையிலான இடத்தை சரியான அளவில் நிரப்புவதற்கு ஏற்ற பருமனுடையதாக இருக்கவேண்டும். முதற் படத்தில் முள்ளந்தண்டானது இடுப்பு முதல் தலை வரை ஒரே நேராக இருக்கின்றன. மெத்தையும் தலையணையும் அதற்கேற்ற பருமனும் அடர்த்தியும் கொண்டிருக்கின் றன. இரண்டாவது படத்திலுள்ள கட்டில் மிகவும் தளர்ச்சி யானதாக இருப்பதால் உங்கள் உடற்பாரத்தால் முள்ளந்தண்டு வளைந்து கோணும் படி செய்துவிடுகின்றன இது ஆரோக் கியமானதல்ல.

மூன்றாவது படத்தில் உள்ளது போன்ற கடுமையான சற்றும் இசைந்து கொடுக்காத தரை அல்லது பலகை வாங்கு போன்ற படுக்கை ஏற்றதல்ல



என்பது புரிந்திருக்கும். காரணம் இதுவும் உங்கள் முள்ளந்தண்டின் இயல் பான வளைவுகளை பேணுவதில்லை .

ஒருபக்கம் சரிந்து, முழங்கால்களை சற்று மடித்துப் படுப்பதுதான் தூங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த நிலையாகும். முழங்கால்களுக்கு இடையே ஒரு சிறு தலையணையை வைப்பது மேலும் சொகுசாக அமையும்.

குப்புறமுகம் புதைந்து வயிற் றில் அழுத்துமாறு ஒருபோதும் படுக்க வேண்டாம். மாறாக நிமிர்ந்து படுப்பதாயின் முழங்கால்களுக்கு கீழே ஒருதலையணை வையுங்கள். இவ்வாறு தூங்கும் போது அடிநாரிக்கு கீழே ஒரு சிறிய தலையணை வைப்பதும் நல்லது.

### பயிற்சிப்பதுவும்

முள்ளந்தண்டை அண்டியுள்ள தசைகளுக்கு பயிற்சி கொடுப்பதனால் வலி குறைவதுடன் மீண்டும் மீண்டும் பிடிப்பு ஏற்படுவதைத் தடுக்கமுடியும். இரண்டு முழங்கால்களையும் குத்தென மடித்துப் படுங்கள். இப்பொழுது உங்கள் இடது முழங்காலை மெதுவாக நெஞ்சைத் தொடுவதுபோல உயர்த்துங்கள். இவ்வாறு செய்யும்போது உங்கள் நாரியின் அடிப்புறம் அடியிலுள்ள கட்டிலோடு அல்லது தரையோடுநன்குஅழுத்தப்பட வேண்டும். இவ்வாறு 5 செக்கன் செய்த பின்னர் கால்களைப் பழையநிலைக்கு கொண்டுசென்று தளரவிடுங்கள்.

இனி வலது காலுக்கும் இதே ப்யிற்சியைச் செய்யுங்கள். மாறி மாறி ஒவ்வொரு காலுக்கும் பத்துத் தடவை மீளச் செய்யுங்கள். மேற்கூறியது முதுகுப்புற தசைககளுக்கான பயிற்சி. இதைத் தவிர நீந்துவது, விரைவு நடைபோன்ற ஏனைய பயிற்சிகளையும் செய்து வாருங்கள்.

இவை நாரிப்பிடிப்பிலிருந்து விடுதலை பெற மட்டுமின்றி உங்கள் பொதுவான உடல் ஆரோக்கியத்தையும் பேண உதவும்.













# பப்பாசிப் பழம் சாப்பிடுவீர்களா?



பப்பாசிப்பழத்தில் பல நல்ல பயன்பாடுகள் உள்ளன. இதைக் கண்டாலே பெண்கள் பயந்து ஓடும் நிலை மாறி இப்போது நிறையப் பேர் சாப்பிடத் தொடங்கி விட்டனர். பப்பாசியில் என்ன உணவு வகைகள் செய்யலாம்.

அரைகோப்பை சர்க்கரையை இரண்டு தேக்கரண்டி ஜெலற்றினுடன் கலந்து ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் சேர்த்துக் கொதிக்க வைக்கவும்.

இது கரைந்ததும் பாதி அளவுக்குக் குறையும் வ்ரை அடுப்பிலேயே வைத்து விடுங்கள். பிறகு அடுப்பிலிருந்து எடுத்து கொட்டை நீக்கப்பட்ட சுத்தமான பப்பாசி, பொடி செய்யப்பட்ட எலுமிச்சை தோல், எலுமிச்சை சாறு சிறிது ஆகியவற்றை இந்த சர்க்கரை நீருடன் கலந்து குளிரூட்டியில் வைத்துவிடுங்கள். முதல் நாளே இதைத் தயாரித்து குளிரூட்டியில் வைத்துவிட லாம்.

மறுநாள் எடுத்துச் சாப்பிடும் போது சுவையோ சுவை தேவைப்பட்டால் அப்பிள், ஆரஞ்சு , பைன் அப்பிள், வாழைப் பழம் ஆகியவற்றையும் கலந்து பழப்பாகு போல் கொடுக்கலாம்.

விழுதாக அரைத்த பப்பாசிக்காய் – 250கிராம், நறுக்கிய பச்சை மிளகாய் 10கிராம், தயிர் 100மி.லீ., மிளகுப் பொடி– சிறிது, உப்பு– சிறிது, பொடியாய் அரிந்த கொத்தமல்லி தழை –சிறிது, வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி பப்பாசிக்கூழை அதில் போடவும்.

ஐந்து நிமிடம் கிளறிய படி அடுப்பில் வைக்கவும். பிறகு அதைப் பாத்திரத்தில் கொட்டி தயிர், உப்பு, பச்சை மிளகாய், கொத்தமல்லி மிள்குப் பொடி ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். பிறகு க்டுகு தாளித்து பெருங்காயம் பொடியும் சேர்த்தால் பச்சடி ரெடி.



# வன்னிப்படையெடுப்புக்களில் நாளுக்கு நாள் வெற்றி கண்டுவரும் அரசாங்கப்படையினர்

## புலிகளும் எதிர் நடவடிக்கையில் தீவிரம் என்கிறார் இராணுவப்பேச்சாளர்

(கொழும்பு)

வன்னிப்படையெடுப்புக்களை மேற்கொண்டுவரும் இராணுவத்தினர் நாளுக்கு நாள் தமது நிலைகளில் இருந்து முன்னேறி விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு முன்னரங்கு நிலைகளை அடைந்து தொடர்ந்தும் வெற்றிகளை அடைந்து வருகின்றனர்.

இதன் போது படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும் இராணுவத்தினரை பல வீனப்படுத்துவதற்காகவும் விடுதலைப்புலிகளால் பல்வேறு தீவிர நடைமுறைகள் கையாளப் பட்டு வருவதாக பாதுகாப்புப்புலனாய்வுப்பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதன் படி வன்னிப்படையெடுப்புக்களை மேற்கொண்டுவரும் இராணுவத்தினருக்கு தேவையான அனைத்துவித மனோபலத்தையும் இராணுவ ஆயுத பலத்தையும் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட முப்படைகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன என இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வன்னிப்படையெடுப்புக்கள் குறித்து கருத்துக்கேட்டபோதே இராணுவப்பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

வன்னியை மீட்டு அங்கு ஜனநாயகத்தை நிலை நாட்டும்பொருட்டு படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் படை முன்னெடுப்புக்களில் இராணுவத்தின் 5 விசேட படையணிகள் உள்ளிட்ட மேலும் சில மேலதிக படையணிகள் நியமிக்கப்பட்டுள்ளன.



அந்த வகையில் வன்னிப்படையெடுப்புக்களை மேற்கொண்டுவரும் இராணுவத்தின் 58ஆவது படையணியினர் தற்போது கிளிநொச்சியின் நாச்சிக்குடா மற்றும் வன்னேரிக்குளம் போன்றபகுதிகளில் நிலை கொண்டுள்ளதுடன் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரங்கு நிலைகள் மீதான தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த படையினர் விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் தாக்குதல்களை நடத்தி வருவதுடன் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு முன்னரங்கு நிலலயின் சுமார் 20 கிலோ மீற்றர் வரை முன்னகர்ந்து அவர்களின் பிரதான நிலைகளில் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும் படை முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுவரும் படையினரை பலவீனப்படுத்துவதற்காகவும் விடுதலைப்புலிகளால் பல்வேறு தீவிர நடைமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன். இத் தீவிர நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் படையினரால் கடும் தாக்குதல் நடத் தப்பட்டுவருவதுடன் அத் தாக்குதல்களின் போது நாள் ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படும் புலிகளின் இழப்புக்களையும் விட அதிகள விலான இழப்புக்களை ஏற்படுத்தவும் படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஓ)

# சுகாதார சேவைகளுக்கு ஆள்பற்றாக் குறை வன்னிப் பிரதேசத்தில் தொற்றுநோய் பரவும் அபாயம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிராந்தியத்தில் தொற்றுநோய்கள் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

விநியோகப்பாதைகள் துண்டிக்கப் பட்டமை, உணவு,மருந்துப்பொருட்களின் விநியோகத்தில் ஏற்பட்டுள்ளசிக்கல்கள், சுகாதார சேவைகளுக்கான ஆள் பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் படையினர் பல முனைகளில் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் பலவந்தமான இடம்பெயர்தலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக ஐ.நா.சுட்டிக் காட்டியுள்ளது.

வடக்கு -கிழக்கு நிலைமைகள் தொடர்பாக ஐ.நா.வெளியிட்டுள்ள மாதாந்த கண்காணிப்பு அறிக்கையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சியின் எல்லைப் பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கிளிநொச்சியின் மத்திய பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பொதுக்கட்டடங்களிலும் திறந்த வெளிகளிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கான அடிப்படை வசதிகள் பாரிய சவாலான விடயமாகவுள்ளது.

எனினும் மனிதாபிமான உதவிகளை வழங்குதல் மற்றும் தற்காலிக வதிவிடங்களை ஏற்படுத்திக்கொடுப்பதில் ஐ.நா. முகவர் நிறுவனங்களும் ஏனைய சர்வதேச மனிதநேய தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. இந்த நிலையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள பகுதிகளுக்கான விநியோகப் பாதைகள் சில இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன.

மேலும் சில பகுதிகளுக்கான விநியோகப் பாதைகள் சேதமடைந்து அல்லது பாதிப்புற்ற நிலையில் உள்ளன. இதனால் பல பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள் விநியோகத்தை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும் வன்னிப்பகுதியில் சுகாதார பணிகளுக்கு கடுமையான ஆள் பற்றாக் குறை நிலவுகின்றது.

இதனால் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் தொற்றுநோய்கள் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்றுக் குழு தலைவராக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# நாட்டின் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக பொலிஸ் பதிவுப் பிரதியை வைத்திருத்தல் அவசியம்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக அப்பாவித்தமிழ் மக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். தமது பதிவை உறுதிப்படுத்தக்கூடிய உரிய ஆவணங்கள் இருந்த போதிலும் இவ்வாறான கைது இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் பலர் புகார் தெரிவிக்கின்றனர். பொலிஸ் பதிவு தொடர்பில் பொலிஸ் நிலைய அதிகாரிகள் பின்பற்றி வரும் பல்வேறு நடைமுறைகள் காரணமாகவே இவ்வாறான கைதுகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்தவொரு பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பதிவொன்றை மேற்கொள்வதற்கு கிராமசேவகர் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகிய இரண்டும் மட்டுமே போதுமானதாக இருந்த போதிலும் குறிப்பிட்ட சில பொலிஸ் நிலையங்களில் அதற்கும் மேலதிகமான ஆவணங்கள் கேட்கப்படுவதாக அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் இவ்வாறு கோரப்படும் மேலதிக ஆவணங்கள் குறித்த நபர்களின் பதிவை ஊர்ஜிதப்படுத்துவதற்கும் அவர்களின் பாதுகாப்பிற்குமே என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தின் பிரகாரம் தமது பதிவை உறுதிப்படுத்தத் தவறுபவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பாதுகாப்பு பிரிவினருக்கு அதிகாரம் உள்ளது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கு தேவையான உரிய ஆவணங்களைக் காண்பித்து அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் தமது பதிவை மேற்கொள்வதுடன் அப்பதிவுப் பத்திரங்களில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கையொப்பமும் பொலிஸ் நிலையத்தின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்ட பத்திரத்தின் பிரதியொன்றை எந்நேரமும் கைவசம் வைத்திருக்க வேண்டும் என வெகுசன பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமாகிய ஐ.எம்.கருணாரத்ன தெரிவித்தார்.

அத்துடன் பொலிஸ் பதிவு தொடர்பில் பொது மக்களுக்கு சிறந்ததொரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வெகுசன் பொலிஸ் பிரிவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தின் 23ஆம் உறுப்புரைக் கமைய பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்டுள்ள குடியிருப்பாளர் பதிவுப் பத்திரமொன்றை அனைத்துப் பொ்லிஸ் நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். இப்பத்திரத்தில் பதிவு செய்வதாயின் கிராம சேவக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை போன்றன தேவைப்படுகின்றன.

இவற்றிற்கும் மேலதிகமாக சில பொலிஸ் நிலையங்களில் பதிவாளரின் புகைப்படங்கள் வேலை செய்யும் நிறுவனத்தின் கடிதம் உள்ளிட்ட சில ஆவணங்களும் கேட்கப்படுகின்றன. இவ்வாவணங்களைக் கைவசம் வைத் திருப்பவர்கள் தமக்கு வழங்கப்பட்ட புத்திரத்தை முழுமையாக நிரப்பி அப்பத்திரத்தையும் உரிய ஆவணங்களையும் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைப்பதன் மூலம் தமது பதிவை மேற்கொள்ள முடியும்.

இவ் ஆவணங்ளைப் பெற்றுக்கொள்ளும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அவை சரியானவையா என விசாரித்து பின்னர் அப்பதிவுப் பத்திரத்தில் தமது கையொப்பத்தையும் இட்டு பொலிஸ் நிலையத்தின் இறப்பர் முத்திரையையும் பதித்து அதன் பிரதிகளை உரிய பதிவாளர்களிடம் ஒப்படைப்பர்.

இவ்வாறான நடைமுறைகளின் மூலம் பொதுமக்கள் தமது பதிவுகளை உறுதிப் படுத்திக்கொள்ள முடியும். இப்பதிவுப்பத்திரங் களானவை 6 மாத காலங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகின்றன. அக் காலப்பகுதிக்குப் பின்னர் மீண்டும் அப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன் குறித்தவொரு பொலிஸ் நிலையத்தில் பதிவினை மேற்கொள்பவர் அவ்விடத்தை விட்டு வேறொரு இடத்திற்கு குடி செல்வாராயின் முதலில் பதிவு செய்த பொலிஸ் நிலையத்திற்கு அதனைத் தெரிவித்து அப் பதிவை ரத்து செய்துகொள்ள் வேண்டும்.

நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழ் நிலை காரணமாக அனைவரும் பொலிஸ் பதிவை மேற்கொண்டு அவர்களால் வழங்கப்படும் பதிவுப் பத்திரத்தின் பிரதி ஒன்றை கைவசம் வைத் திருத்தல் மிகவும் அவசியமாகிறது. அவ்வாறில்லாவிடத்தே இவ்வாறான கைதுகள் இடம் பெறுகின்றன. தம்து பதிவு தொடர்பில் ஏதேனும் குழறுபடிகள் காணப்படுமாயின் உரிய மேலதிகாரிகளை நேரில் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது சிறந்தது. (ஓ)

## கடமை நேரத்தை குறைக்க தீர்மானம்

தனியார் பயணிகள் பேரூந்து ஊழியர்கள் தமது கடமை நேரத்தை குறைக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பேரூந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஊழியர்கள் தமது கடமை நேரத்தை ஆகக் கூடியது 12 மணித்தியாலங்களால் மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார். உரிய முறையிலான நேர அட்டவணை அற்றநிலையில் பல பேரூந்து ஊழியர்கள் 17 மணி நேரம் வரை கடமையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ)

## பௌத்த பிக்குமாருக்கு தனி நீதிமன்றம்

பௌத்த பிக்குகள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்குதனியானஓர்நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சில பௌத்த பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளதாக பிரபல சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்தபிக்குகளினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயல்களை விசாரிப்பதற்கு பௌத்த பிக்குகளினாலான நீதிவான் குழுவொன்றுடன் கூடிய தனியான நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பௌத்த பிக்குகள், பௌத்தர்கள் மற்றும் பௌத்த மதத்தின் அபிவிருத்திக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என குறித்த பௌத் தபிக்குகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பௌத்த பிக்குகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பௌத்த நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட முடியும் என அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ள்னர். (ஓ)

தேவை ஏற்படாதவரை நண்பனைத் தெரிந்து கொள்ள முடியாது.

*- அப்துற் றஹீம்*

வலம்புரி

## வன்னியில் பெரும் அவலம் மக்களுக்கு உதவ வாரீர்

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்று வரும் கடும் யுத்தம் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் படும் அவலத்தை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ராயப்பு ஜோசப் ஆண்டகை நேரில் சென்று நிலைமையை அவதானித்து அது பற்றிய விபரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரின் நேரடி அவதானிப்பில் சுமார் 2 இலட்சம் மக்கள் போரினால் இடம்பெயர்ந்து தங்க இடமின்றி மர நிழல்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் குறைந்தது எட்டுத் தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள் என்ற தகவல் துன்பத்தை இரட்டிப்பதாகும்.

இடம்பெயர்ந்த இம் மக்களுக்கான நிவாரணப் பணிகள் மந்த கதியிலேயே நடக்கின்றன. அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு வன்னி செல்வதில் இருக்கக் கூடிய கட்டுப்பாடுகள் மற்றும் நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஓமந்தை சோதனைச் சாவடியில் இருக்கும் தடைகள் காரணமாக வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகள் நீண்டநாட்களாக தடைப்பட்டுள்ளன.

நிவாரண உதவிகள் இல்லாததன் காரணமாக அங்கு பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் அவலம் தோன்றியுள்ளது.

இதற்கு மேலாக தொற்றுநோய்களின் தாக்கத்திற்கு குழந்தைகள், சிறுவர்கள் ஆளாகியுள்ளனர்.

உரிய மருந்துகள் கிடைக்காத நிலையில் உயிராபத்துக்கள் சடுதியாக -பெருவாரியாக ஏற்படும் துயரமும் காத்திருக்கின்றதெனும் உண்மையை மறப்பதற்கில்லை.

இவ்வாறு வன்னியில் மக்கள் இடம்பெயர்ந்து பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் நிவாரணப் பணிகள் ஒழுங்காக இடம்பெறுவதாக அரசு செய்யும் பிரசாரம் அபத்தமானது.

அரசின் பிரசாரம் பொய்மையானது என்பதை மன்னார் ஆயரின் தகவல்கள் நிரூபித்துள்ளன.

எனவே அரசின் பிரசாரத்தில் கள்ளுண்டார் போல் மயங்கி உண்மையைக் காணத் தவறும் வெளிநாட்டுத் தூதுவராலய இராஜதந்திரிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐ.நா சபை என்பன தாம் சார்ந்த பிரதிநிதிகள் அடங்கிய விசேட குழுவொன்றை உடனடியாக வன்னிக்கு அனுப்பி நிலைமையை நேரில் கண்டறியவேண்டும்.

மனித உரிமைகள், மனித நேயம் என்பன பேசுபடுபொருள் அல்ல. அவை நடைமுறையில் செயலாக்கம் பெறவேண்டியவை. ஆக உலக அமைப்புக்கள் இலங்கையில் மனித நேயத்தை விரும்பினால் உடனடியாக காலதாமதமின்றி வன்னியில் இடம்பெயர்ந்து அவலத்தில் சிக்கியிருக்கும் மக்களை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

இதை விடுத்து நாட்டின் தலைநகரில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு மனித உரிமை பற்றிப் பேசுவதும், மனிதநேயம் பற்றி அறிக்கை விடுவதும் பயனுள்ளதல்ல.

இதேநேரம் வன்னியில் தமிழ் மக்கள் படும் அவலத்தில் இந்திய மத்திய அரசு பாராமுகம் காட்டுவது பாரத தேசத்தின் அகிம்சைக் கொள்கைக்கு எவ்வகையிலும் அழகுடையதல்ல.

குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டிகளை தமிழக மக்களுக்கு வழங்கி உயிர் பிரியும் நேரத்திலும் முதலமைச்சர் பதவியை தானே வைத்திருக்கவேண்டுமென உள்ளார்ந்தமாக எண்ணும் கலைஞர் கருணாநிதி வன்னியில் தமிழ் உறவுகள் படும் துயரை கவனிக்கவேண்டும்.

# அரசாங்கம் அரச ஊடகங்களை சுதந்திரமாக செயற்பட வைக்கவேண்டும்

## குற்றச்சாட்டுக்கள் பற்றி தெளிவுபடுத்த சந்தர்ப்பம் கோருகின்றது ஜே.வி.பி

(கொழும்பு)

அரச ஊடகங்களை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஜே.வி.பி மீதான தவறான செய்திகளை மக்கள் மீது திணித்து வருகின்றது.

குத்துக்கரணம் அடித்தாலும் எமது பயணத்தை தடுத்து விட முடியாது என ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் குருநாகல் மாவட்ட எம்.பியுமான அனுரகுமாரதிஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினதும் அதன் சார்பிலும் ஜே.வி.பி மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரச ஊடகங்களில் தெளிவுபடுத்த தமது கட்சிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் எனக்கோரி ஊடக அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அக் கடிதத்தில் அனுர குமாரதிஸநாயக்க எம்.பி.மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை என்ற நிகழ்ச்சி நிரலில் அரச ஊடகம் யாவருக்கும் பொதுவானது என்றும் பக்கச் சார்பற்ற சுயாதீன தன்மை உடையதாக செயற்படவேண்டும் என்றும் கொள்கை புகுத்தப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை.

அரசாங்கம் மஹிந்த சிந்தனைக்கு மாறான கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது. அரச ஊடகங்களில் அமைச்சர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவாக செயற்படுபவர்களுக்கே சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் ஜே.வி.பி.மீதான தவறான பிரசாரங்களும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச் சாட்டுக்களுக்கு பதில் தருவதற்கோ அல்லது பொதுமக்களிடம் இதனைத் தெளிவு படுத்துவதற்கோ சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுகின்றன.

கடந்த முதலாம் திகதி தேசிய தொலைக்காட்சியில் ஒலிபரப்பான மக்கள் கருத்து நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி என் மீதும் ஜே.வி.பிகட்சி மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இவை அனைத்தும் பொய்யான குற்றச்சாட்டுக்களாகும். இதன் மூலம் எமது ஆதரவாளர்களை திசை திருப்பி மக்கள் மத்தியில் ஒரு மாயையை உண்டுபண்ணுவதற்கே முயற்சிக்கப்படுகின்றது. ஆனால் மக்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் ஏமாறவும் மாட்டார்கள் என்பதை அரசாங்கமும் விமல் வீரவன்சவும் நன்றாக புரிந்துகொள்ளவேண்டும்.

அரசாங்கத்திற்கு அச்சம் இல்லை என்றால் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அரச ஊடகங்களை சுதந்திரமாக செயற்பட வைக்கவேண்டும்.

அத்துடன் என் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்துவதற்கான சந்தர்பங்களை அமைத்துத்தரவேண்டும். உண்மை நிலைவரங்களை தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது. அது தொடர்பான கடமையும் ஜே.வி.பிக்கு இருக்கின்றது. எனவே அரச ஊடகங்களில் எதிர்க்கட்சியினருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்க ஊடக அமைச்சர் ஆவண செய்யவேண்டும். (ஓ)

# ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்புக்கு சம்பள ஆணைக்குழுவே காரணம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

சம்பள ஆணைக்குழுதனது செயற்பாட்டை சரியாகச் செய்யத் தவறியதாலேயே உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஸ்தம்பிதநிலை ஏற்பட்டிருப்பதாகமனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர்நிமால் புஞ்சிகேவா தெரிவித்தார்.

பழமை வாய்ந்த சம்பளத் திட்டங்களினால் ஆசிரியர் களின் சம்பளங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவற்றைத் தீர்ப்பதற்கு சம்பள ஆணைக்குழு சரியான நடவடிக்கை எடுக்காததால் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இல்குவில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டிய விடயத்தைலயனல் பெர்னாண்டோ தலைமையிலான சம்பள ஆணைக் குழு சரியான முறையில் கையாளத் தவறியதால் ஆசிரியர் தொழிற்சங்கங்கள்உயர்தரப்பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்குச் செல்லாமல் பணிப்புறக் கணிப்பில்ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆசிரியர்களின் சம்பள விடயத்தை சம்பளஆணைக்குழு பிழையான வகையில் கையாள்கிறது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பல்வேறு தடவைகள் விமர்சித்திருந்ததாகவும் எனினும் அவற்றைக் கவனத்தில் கொள்ள சம்பள ஆணைக் குழு தவறிவிட்டதாகவும் புஞ்சிகேவா தெரிவித்தார்.

புஞ்சிகேவாவின் விமர்சனத்தை வரவேற்றிருக்கும் ஜே.வி.பியின் தொழிற்சங்கத் தலைவர் மஹிந்த ஜயசிங்க ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசியல் தவறிவிட்டது எனக் கூறினார். (ஓ)

# மோசமான செயல்களில் ஈடுபடும் பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொலிஸ் ஆணைக்குழு திணைக்களத்துக்கு வலியுறுத்து

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்துக்குள் சில மோசமானவர்கள் நுழைந்து முழு பொலிஸ் சேவையையும் கேவலப்படுத்தி வருவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களினால் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் 14 வயதுச் சிறுமி ஒருவரை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் மோசமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும்,

ஹக்மனவில் இளைஞர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் அண்மையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெறும் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.சீ.லோகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான மோசமான செயல்களில் ஈடுபடும் பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனப் பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் திணைக்களத்தை வலியுறுத்தியுள்ளது. (ஓ)

## காலவதியான பொருட்கள் அழிப்பு

யாழ். நகரப்பகுதியில் கடந்த 5ஆம் திகதி அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர், சுகாதார பாது காவலர் இணைந்து திடீர் பரிசோதனை மேற்கொண்ட பொது யாழ். நகர மையப்பகுதி பஸ் நிலைய சுற்றாடல் மற்றும் மின்சார நிலைய வீதி உணவு கையாளும் நிலையங்களில் காலவதியான பிஸ்கட், லெமன் சோடா என்பன கண்டுபிடிக்கப்பட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டு அவர்களின் சம்மதத்துடன் காலவதியான பொருள்கள் அழிக்கப்பட்டன. (ச)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி


### ஆளுமையின் முக்கியத்துவம்



கல்வி, பயிற்சி இவை அனைத்தின் இலட்சியமும் இந்த மனிதனை உருவாக்குவதாகவே இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக நாம் வெறும் மேற்பூச்சு பூசி அழகுபடுத்த முயன்று வருகிறோம். அகத்தே ஒன்றும் இல்லாத போது புறத்தை அழகுபடுத்துவதால் என்ன பயன்?

எல்லா பயிற்சிகளின் பயனும் நோக்கமும் மனிதனை வளரச்செய்வதே தன் சகோதர மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவன் , அவர்கள் மீது மாயவலையை வீசியது போன்று அவர்களை கவர்பவன் ஆற்றலின் ஒரு சுரங்கமாகிறான். அத்தகையவன் தயாராகும் போது விரும்புகின்ற எதையும் அவனால் செய்ய முடியும் . அவனது ஆளுமையின் ஆதிக்கம் எதன் மீது செலுத்தப்பட்டாலும் அதனைச் செயல்படவல்லது ஆக்கும்.

# மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த சீரியர் பண்டிதர் மயில்வாகனனார்



"அறிவற்றம் போகார்; நடுநிலை நீங்கார்; அறிவியல் வாணிபம் விரும்பார்; அன்பு நெறிவழுவார்; அறத்திறன் பிறழார்; இத் தகையது இவர் வண்ணம் எழுத்து வண் ணமும் இவையே"

என்று புலவர் மணி பண்டிதர் க.மயில் வாகனனார் குறித்து இலக்கிய கலாநிதி பண் டிதர் மு.கந்தையா அவர்கள் குறிப்பிட்ட கருத் தானது மயில்வாகனன்னாரின் உயர்பண்பு களை குறித்துரைக்கின்றது. ஈழத்தின் மரபு சார் தமிழறிஞராய் தமிழ்ப்பண்பாட்டு விழு மியங்களில் பற்றுறுதியுடன் வாழ்ந்து 09.08.2008 அன்று இயற்கை எய்திய புல வர்மணி பண்டிதர் மயில்வாகனனார். தமிழ் உலகிற்கு ஆற்றிய பணிகள் பெறுமதிமிக்க னவாகும்.

1919ஆம் ஆண்டு தைமாதம் 25ஆம் திகதி வட்டுக்கோட்டையில் கதிரேசு- வள்ளி யம் மையார் தம்பதிகளுக்கு மகனாய் பிறந்த பண் டிதரவர்கள் 1939இல் பண்டிதர் ஆசிரி யர் பயிற்சிக்கல்லூரியில் இணைந்து கற்று யாழ். ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங் கத்தினதும் மதுரைத்தமிழ்ச் சங்கத்தினதும் பண்டிதராய் பட்டம் பெற்ற புலமையாளரா வார். வித்துவான் சுப்பையாபிள்ளை புலவர் மணி இளமுருகனார் போன்றோரிடம் மரபு வழிக் கல்வியைக் கற்ற இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராய் 1942இல் மாத்தளை சாஹிராக் கல்லூரியிலும் 1943இல் மாத்தளை விஜ யாக் கல்லூரியிலும் பின்பு 1954இல் விஜய ரத்தினம் மகாவித்தியாலயத்தின் அதிபராக வும் கடமையாற்றியதோடு யாழ்ப்பாணத்தில் 1964இல் சங்கானை சிவப்பிரகாச மகாவித் தியாலத்திலும் 1968இல் தொல்புரம் விக்னேஸ் வரா வித்தியாலயத்திலும் 1969-1978 வரை வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார் .

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அமைப்பு சார் செயற்பாட்டின் தேவையை உணர்ந்து 1964இல் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதில் தமிழ் ஆர்வலர்க ளோடு இணைந்து பணியாற்றி அச்சங்கத் தின் தலைமைப் பொறுப்பையும்வகித்தபண்டி தரவர்கள் இளைய தலைமுறையினருக்கு தமிழறி வைக்கொண்டு செல்லும் முனைப் புடன் இறுதி வரை உழைத்து வந்தார். கட்டி றுக்கமான மொழி நடையில் எழுதும் வல் லமைமிக்க இவர் கவிதைகளூடாகவும் உரை நடைகளூடாகவும் தனது ஆக்க இலக்கியச் செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

மரபுவழி அறிஞரான மயில்வாகன னாரின் படைப்புக்களில் சைவசமயம் சார்ந்த இலக்கி யங்களே பெருமளவில் காணப்படு கின்றன. பொருத்தமான இலக்கியவடிவங் களைப் பொருள் நிலைக்கேற்ப கையாண் டுள்ள இவர் விசுவேசர் புராணம், ஆண்டி கேணி ஐயனார் புராணம், ஆகிய புராண இலக் கியங்களையும் வட்டுக்கோட்டை பிராட்டிவளவு ஞான வைரவர், நீர்கொழும்பு ஸ்ரீசிங்கமா காளி, காரை நகர் தோப்புக்காடு ஸ்ரீசுப்பிர மணிய சுவாமி, வட்டு மேற்கு சின்னக்கதிர் காமம், வட்டுக்கோட்டை ஞானவைரவர் ஆகிய தலங்களின் மீது ஊஞ்சல் இலக்கியங்களை யும் படைத்துள்ளார்.

பண்டிதரவர்களின் படைப்புக்களில் நீர் கொழும்பு மாரியம்மன் ஸ்ரீ சிங்கமாகாளி, புங்கை ந்கர் வீரகத்தி விநாயகர், காரைநகர் திக்கை முருகன், வட்டுக்கோட்டை களவி யோடை மாரியம்மன் ஆகிய ஆலயங்கள் மீது பாடிய திருப் பதிகங்களும் நீர்கொழும்பு சித்தி விநாயகர் இரட்டைமணிமாலை, வட்டுக் கோட்டை விசு வேசர்,மும்மணிமாலை, சந் நிதி முருகன் செஞ்சொல்மாலை, வட்டூர் ஶெப்படி யொல்லை, செந்தில் முருகையன் நான் மணி மாலை என்பனவும், ஸ்ரீசத்திய சாயி பாபா திருப்பள்ளி எழச்சி, பிராட்டிவளவு ஞான வைரவர், நீர் கொழும்பு சித்திவிநாயகர் மீது பாடிய அந்தாதி இலக்கியங்களும் நாவலர் அம்மானை முறிகண்டி விநாயகர் போற்றிப் பஃ றெடை ஆகியனவும் குறிப்பிடத்தக் கன வாக உள்ளன.

பேச்சாற்றலும் புராணபடலம் ஓதுவதிலும் வல்லமை பெற்றிருந்த மயில்வாகனாரவர் கள் உரை முயற்சிகளையும் செய்துள்ளார். திக்கைத் திரியந்தாதி தன்னைமையாக அந் தாதி போன்ற படைப்புகளிற்கு இவர் மேற் கொண்ட உரைகள் உதாரணமாக நோக்கத் தக்கனவாகும். குழந்தைகளை மையப்படுத்தி குழந்தைகளுக்கான இன்பத்தமிழ் பாடல்கள் என்ற சிறுவர் இலக்கியமும் இவரால் படைக் கப்பட்டதாகும்.

சஞ்சீவியில் "சிகண்டியார் என்ற பெயரில் பழந்தமிழ் இலக்கியங்களை மையப்படுத்தி இவர் எழுதிய கட்டுரைகள் கனதிமிக் கன. கூடவே தமிழமுதம், காயத்திரி மந்திரம், குழந் தைகளுக்கான செந்தமிழ்க் கட்டுரைகளும் தனிக்கவனிப்பிற்குரியனவாகும். கல்விப் புலத்தில் மாணவர்களின் பரீட்சை நோக்கிய தேடல்களுக்கு உறுதுணையாக குவி. அச்ச கத்தினரால் வெளியிடப்பட்ட மொழியறிவுச்சா புத்தகங்களில் பண்டிதரின் பங்கும் கனி சமாக இருந்துள்ளது.

## மறைந்தார் மாண்பு

ஈழத்தின் ஆரம்பகால சமய இலக்கி யங் களை ஆராய்கையில் சமயத்தோடு வர லாற்று விடங்களும் இணைந்துள்ளன என் பதற்கு தட்சணகைலாசபுராணம் சான்றாக உள் ளது போல பண்டிதரின் புராண இலக்கி யங்களும் தனிக் கவனிப்பிற்குரியதாய் அமை கின்றன. ஈழத்தில் ஒல்லாந்தரின் ஆட்சி நிலை பெற்றிருந்த காலத்தில் காரை நகரில் திகழ்ந்த வியாவில் ஐயனார் ஆலயம் பாதிப்பிற்குள் ளானமை இந்தியாவைச் சேர்ந்த பெரியார் ஆண்டி என்பவரின் வருகை ஆலய மீள் நிறு வல் போன்ற நிகழ்வுகளை மையப்படுத்தி அவற்றை பன்முக நோக்கில் விபரிக்கும் ஆண்டிகேணி ஐயனார் புராணமானது பண்டி தரவர்களின் புலமையாற்றலை வெளிபடுத்தி நிற்கின்றது.

*"பேசும் ஒல்லாந்துள்ளார் பன்னாள்*
*முயன்றுந்தான்*
*ஆசில் கோயில் தன்னை இடித்தே*
*அக்கல்லால்*
*தேசார் கடலில் கம் மன் கீவாங் கோட்டை*
*தனை*
*நேசமுடனாய் கட்டி நிம்மதி கொண்டாரே"*

என்று ஆண்டிகேணி ஐயனார் புரா ணத்தின் வியாவிற் சுருக்கத்தில் ஒல்லாந்தர் ஆலயத்தை இடித்து கடற்கோட்டையைக் கட்டிய செய்தியை புலவரவர்கள் குறிப்பிட்டுள் ளமையானது வரலாற்று விடயங்களோடு தொடர்புபட்ட ஐயனார் ஆலயத்தின் முக்கியத்து வத்தை குறித்துரைப்பதாயுள்ளது.

"... சென்றகாலப் பழுதிலாத் திறத்தையும் இக்கால நிலைப்பாடுகளையும் ஒருங் கிணைத்து புராணத்தை ஆசிரியர் இயற்றி யுள்ளார்" என இவரது விசுவேசர் புராணம் தொடர்பான அணிந்துரையில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை யும் "பண்டிதர் அவர்களின் வசன நடை மிக மிக இறுக்கமானது , மிடுக்கானது , தர்க்கரீதி யானது , தெளிவானது. அவர்களின் வசனங் களை வாசிக்கும்போது சேனாவரையர் , பரிமேலழகர், நச்சினார்க்கினியர் என்போரின் வசனங்கள் தாம் நினைவிற்கு வரும்"

**ந.குகபரன்**
**சித்தன்கேணி**

என்று பண்டிதரோடு நெருங்கிய நட்புக் கொண்ட பண்டிதர், சிவத்திரு வைத்தீஸ் வரக் குருக்கள் அவர்கள் குறிப்பிட்ட கூற்றுகளும் பண்டிதர் க.மயில்வாகனனாரின் மாண்பினை வெளிப்படுத்தி நிற்கின்றன. தமிழ்த் தொண்டை தனது வாழ்வின் மூச்சாய் வரித்து என்றும் இனியராய் வாழ்வாங்கு வாழந்து மறைந்த புலவர்மணி பண்டிதர் க.மயில் வாகனனாரின் வாழ்க்கை அனைவருக்கும் சிறந்த முன்னு தாரணமாகும்.

# அரச ஊழியர்களுக்கு மொழிப்பயிற்சி அளிப்போருக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு தமிழ் மற்றும் சிங் கள மொழிகளை கற்பிக்கும் செயற்திட்டம் வெற்றி கரமான முறையில் மேற்கொள்ளப் பட்டு வருவதாக அரசியல் அமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியூ குண சேகர தெரிவிக்கின்றார்.

செயற்திறன் மிக்க அரச சேவை யொன்றை உருவாக்கும் நோக்கிலேயே சிங்கள மொழி பேசும் அரச ஊழியர்களுக்கு தமிழ் மொழியையும் தமிழ் மொழிபேசுகின்ற அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழியை யும் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

2007ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் அரசாங்க ஊழியர்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மொழியை கற்றுக் கொள் வது அமைச்சரவை அங்கீகாரத்துடன் கட்டா யமாக்கப்பட்டுள்ளது.

அந்தந்த அரசாங்க நிறுவனங் களி லேயே இந்த மொழிகளை கற்பிக்கும் நட வடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த மொழிகளை கற்றுக் கொள்ளும் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கவும் அரசாங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை கற் றுக்கொண்ட அரச ஊழியர்களுக்கான முதலாவது பரீட்சை கடந்த மார்ச் மாதம் நடை பெற்றது.

தமிழ் மொழியைக் கற்றுக்கொண்ட 7ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கும் சிங்கள மொழியை கற்றுக்கொண்ட 2ஆயி ரத்திற்கு மேற்பட்டோரும் தோற்றியதாக அமைச்சர் டியூ குணசேகர குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களுக்கு தமிழ் மற்றும் சிங் கள மொழிகளை கற்பிக்கும் ஆசிரியர்க ளுக்கும் விசேட பயிற்சிகளை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இவர்களை பயிற்றுவிப்பதற்காக அகலவத்தையில் நிர் மாணிக்கப்பட்டுவரும் வதிவிட பயிற்சி நிலை யம் இன்னும் 2 வாரங்களில் திறந்து வைக்கப் படும்.

(ஓ-6)

# பேராசிரியர் திஸ்ஸ விதாரண தென்னாபிரிக்காவுக்கு விஜயம்

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற் பாடுகள் குறித்து அதன் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தென்னா பிரிக்க அரசியல் தலைவர்களுக்கு விளக்க மளித்துள்ளார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கடந்த 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை தென்னாபிரிக்கா விற்கானவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந் தார். இதன் போது தென்னாபிரிக்க அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்து உரையாடிய அமைச்சர் இலங்கையில் தற்போதைய நில வரம் மற்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு வின் செயற்பாடுகள் என்பனகுறித்து விளக்க மளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் , தென்னா பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலை வர்கள் மற்றும் அந்த நாட்டு பிரதி தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஆகியோரையும் அமைச் சர் திஸ்ஸ விதாரண சந்தித்துரையாடியுள் ளார். (ஓ)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான 540 இடங்கள் காணப்படுகின்றன

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.கருணாரத்ன தகவல்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் படுத்தக்கூடிய வகையிலான 540 இடங்கள் கொழும்பில் மாத்திரம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொள் ளக்கூடிய வாய்ப்பு காணப்படும் பல பிர தேசங் கள் காணப்படுவதாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சிவில் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம் கருணாரத்ன இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பிரபுக்கள் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் சிவிலியன்களை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்வதற்கு குறித்த பிரதேசங்களைப் புலிகள் பயன்படுத்தக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப்படையினர் நகர நிர்வாகம் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து குறித்த பாதுகாப்பற்ற பிரதேசங்கள் தொடர்பில் நட வடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாகப் பொலி ஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ)

# கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் பயங்கரவாதத் தடுப்பு பிரிவில்

(கொழும்பு)

லிந்துலையில் வெள்ளை வான் கும்பலி னால் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகஇலங்கை தொழிலாளர்காங்கிரஸ் தெரிவித்துள்ளது.


நுவரேலியா லிந்துலை தங்கலை தோட்டத்தைச் சேர்ந்த ராஜரத்தினம்நடராஜா என்றநபரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட தாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வெள்ளைவரன் கும்பலினால் கடத்தப் பட்டதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்ற தனைத் தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறித்த இளைஞர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள் ளமை தெரியவந்துள்ளது.

விசாரணைகள் முடிவடைந்ததன் பின் னர் உடனடியாக குறித்த இளைஞர் விடுவி க் கப்படுவார்எனத் தாம் நம்புவதாக தொழி லாளர் கங்கிரஸ் விடுத்துள்ள ஊடக அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# ஐ.பி.எல்லில் விளையாட நினைத்தால் அணியிலிருந்து ஓய்வு பெற்று விடலாம்

## இலங்கை வீரர்களுக்கு ரணதுங்கா எச்சரிக்கை



(கொழும்பு)

தேசிய அணியில் விளையாட வீரர்கள் அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அர்ஜுன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அணி அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் பங்கேற்க உள் ளது.

அதே சமயத்தில் இந்தியாவில் ஐ.பி.எல் அமைப்பு நடத்தும் இருபது -20 தொடர் நடைபெறவுள்ளது.

இதையடுத்து இலங்கை .அணியின் தலைவர் ஜெயவர்த்தன உள்ளிட்ட சில முக்கிய வீரர்கள் இங்கிலாந்து தொடரை புறக் கணித்து விட்டு ஐ .பி.எல் தொடரில் பங்கேற்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள தாகவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் தேசிய அணிக்காக விளையாட தவறும் வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப் பயணம் செய்வதில் எந்த மாற்றமும் இல் லை. இது தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ளோம்.

இதை எக்காரணம் கொண்டும் மீற மாட்டோம். இலங்கை வீரர்கள் ஐ.சி.சி மற்றும் இலங்கை சபையுடன் 2 ஆண்டு ஒப்பந்த மொன்றில் கையெழுத்திடவுள்ளனர்.

இவர்களுக்கு கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க மட்டுமே அனு மதியளித்துள்ளோம்.

தற்போது ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க நினைத்தால் ஓய்வு பெற்று விடலாம். தங் களது தொடரில் விளையாடுவதற்காக ஓய்வு பெற்ற வீரர்களை ஐ.பி.எல் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என அதன் தலை வர் லலித்மோடி கூறியிருப்பதையும் இவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அர்ஜுன ரணதுங்க தெரிவித் தார்.

(5)

# பீஜிங் பாராலிம்பிக்கில் இலங்கை சார்பில் 5 வீரர்கள் பங்கேற்பு

(பீஜிங்)

பீஜிங்கில் நடைபெற்றுவரும் பராலிம்பிக் போட்டிகளில் இலங்கையில் 5 வீரர்களும் இந்தியாவின் சார்பில் 5 வீரர்களும் பங்கேற் கிறார்கள்.

இப்போட்டிகளில் 148 நாடுகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

கடந்த மூன்று முறையாக இலங்கை பராலிம்பிக்கில் பங்குபெற்றாலும் இதுவரை பதக்கம் பெறும் வாய்ப்பு கிட்டவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்ற பரா லிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் ஈட்டியெ றியும் வீரரான தெய்வேந்திர பவேந்திரா தங் கப் பதக்கம் வென்று உலக சாதனை படைத் திருந்தார்.

(5)

# இந்திய டெஸ்ட் தொடரில் சாதிக்க ஆஸி. தயாராம்

## கிளார்க் கூறுகிறார்



(மெல்பேர்ன்)

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் சவாலுக்கு அவுஸ்திரேலிய வீரர்கள்முழு வீச் சில் தயாராக உள்ளதாக, அணியின் தற்காலிக அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இம்மா தம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கு சுற்றுப்பய ணம் மேற்கொள்கின்றது.

மொத்தம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் மோதுகின்றன.

இந்த தொடர் குறித்து, ஆஸி. அணியின் தற்காலிக அணித்தலைவர் மைக்கெல் கிளா ர்க் கூறியதாவது, வடக்கு அவுஸ்திரேலியா வில் கடுமையான வெப்பம் நிலவிய நிலை யில், பங்களாதேஷ் அணியுடன் ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடினோம். டார் வினில் நடந்த 3 போட்டியிலும் வென்று தொடரைக் கைப்பற்றினோம்.

இந்த தொடர், அடுத்து இந்தியாவுடன் நடக்கவுள்ள டெஸ்ட் தொடருக்கு நல்ல பயிற் சியாக அமைந்தது. அவுஸ்திரேலிய வீரர்கள் எல்லோரும் நல்ல உடல் தகுதியுடன் இந்திய சவாலுக்கு தயாராக உள்ளனர்.

இந்திய ஆடுகளங்களில் பந்துவீசுவது குறித்து சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர் னிடம் பல விஷயங்கள் கற்றுக் கொண்டேன். அவர் சொல்லிக் கொடுத்த நுணுக்கங்கள் நிச்சயம் உதவும். இவ்வாறு கிளார்க்கூறி னார்.

(5)

# இந்திய தொடரில் ஆடாவிடினும் சைமண்ட்ஸிற்கான சம்பளம் 8 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்

## ஆஸி.கிரிக்கெட் சபை அறிவிப்பு



(மெல்பேர்ன்)

இந்தியத் தொடரில் பங்கேற்கா விட்டா லும் சர்ச்சை நாயகன் சைமண்ட்ஸ் இந்திய ரூபாயில் 80 இலட்சம் சம்பளமாக பெறவுள் ளார்.

அவுஸ்திரேலியாவின் சர்ச்சைக்குரிய வீரர் சைமண்ட்ஸ் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரின்போது இவர் மீன் பிடிக்கச் செல்ல அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் (சீ.ஏ.)அதிருப்திக்கு ஆளாளார்.

இதையடுத்து தொடரில் இருந்து நீக்கப் பட்ட அவர் மன நல மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அடுத்த மாதம் (ஒக்டோபர் 09) ஆரம்ப மாகவுள்ள இந்திய டெஸ்ட் தொடரில் பங் கேற்க மாட்டார் எனத் தெரிகிறது.

இது குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிகாரி பீட்டர் யங் கூறுகையில்,

சைமண்ட்ஸ் எங்களால் ஒப்பந்தம் செய் யப்பட்ட வீரர். இவர் மன நல சிகிச்சை மேற் கொண்டு வருவதால்இந்தியத் தொடரில் விளையாடாத நிலையிலும் முழு ஒப்பந்த ஊதியமும், மூன்று மாத சம்பளமும் பெறு வார்.

காயம் காரணமாக ஒரு வீரர் ஆட இயலாத அடிப்படையின் கீழ் சைமண்ஸுக்கு இந்திய ரூபாயில்90 இலட்சம் வழங்கப்படும் என்றார்.

வெளிநாட்டில் விளையாடும் டெஸ்ட் ஒன்றுக்கு ஒரு வீரருக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ரூபாய் 8 இலட்சம் சம்பளம் நிர்ணயித் துள்ளது.

இது தவிர மாதச் சம்பளமும் ஒப்பந்த வீரர்களுக்கு வழங்கப்படுகிறது. (5)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்

## ஜான்கோவிக்கை வீழ்த்தி செரீனா சம்பியனானார்

(நியூயோர்க்)

இந்த ஆண்டின் இறுதிப் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டெனனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வரு கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி நேற்றுக் காலை நடந்தது. இதில் இரண்டாம் நிலை வீராங்க னையான ஜெலீனா ஜான்கோவிக் (செர்பி யா) -செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) மோதினார்கள்.

நாலாம் நிலை வீரரான செரீனாவின் அபார ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து ஆட முடியாமல் ஜெலீனா திணறினார்.

செரீனா 6:4,7:5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் பெற்றார்.

இதன் மூலம் அமெரிக்க ஓபன் பட்டத்தை செரீனா மூன்றாவது முறையாக கைப்பற் றியுள்ளார்.

இதற்கு முன்பு 1999,2002 ஆம் ஆண் டில் அமெரிக்க ஓபன் பட்டத்தை அவர் வென்றிருந்தார்.

செரீனா கைப்பற்றிய 9-வது கிராண்ட்ஸ் லாம் பட்டம் இதுவாகும். அவுஸ்திரேலிய ஓபன் (2003,2005, 2007), அமெரிக்க ஓபன் (1999,2002, 2008) பட்டத்தை தலா மூன்று முறையும் ,விம்பிள்டன் பட்டத்தை 2 முறையும் (2002,2003) பிரெஞ்சு ஓபன் பட்டத்தை ஒரு முறையும் (2002) கைப்பற் றியிருந்தார்.



இந்த வெற்றி மூலம் செரீனா மீண்டும் நம்பர் -1 இடத்தை பிடிக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

பெண்கள் இரட்டையர் பிரிவில் காரா பிளாக் (சிம்பாவே) - கியூபர் அமெரிக்கா ஜோடி சம்பியன் பட்டம் பெற்றது. இந்த ஜோடி 6:3,7:6 (8:6) என்ற நேர் செட் கணக்கில் லிசாரேமண்ட் (அமெரிக்கா) -சமந்தா அவுஸ்ரேலிய ஜோடியை வென்றது.

காராபிளாக் ஏற்கனவே இந்திய வீரர் லியாண்டனர் பெயசுடன் இணைந்து கலப்பு இரட்டையரில் பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(5)

## ஐ.நா. மற்றும் ஐ.சி.ஆர்.சி...

தினுள் சென்று வரக் கூடியதாக இருக்கின்றது.

இந்தப் புதிய நடைமுறையை மேலிடத்து உத்தரவுக்கமைய ஓமந்தை சோதனைச்சாவடியில் உள்ள படையினர் நடைமுறைப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டில் உள்ள வன்னிப்பிரதேசத்தை அவர்களிடமிருந்து கைப்பற்றி அங்குள்ள மக்களை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்பதற்காக அந்தப் பகுதியில் இராணுவம் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும்- இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்ற கடுமையான நேரடிச் சண்டைகள் மற்றும் மோசமான எறிகணைத் தாக்குதல், சண்டைகள் என்பவற்றினால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இடம்பெயர்ந்து சொல் லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

இந்த நிலையில் ஓமந்தை ஊடான (ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் தவிர்ந்து) அரச சார்பற்ற நிறுவனங்களின் போக்குவரத்துக்களை அரசாங்கம் தடைசெய்துள்ளதன் மூலம் அந்தப் பகுதியில் மனிதாபிமான உதவிகளுக் காக ஏங்கித் தவிக்கும் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகள் மேலும் மோசமடையக் கூடிய அபாய நிலைமை ஏற்பட்டிருப்பதாக தொண்டு நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## வன்னிக் களமுனை மோதல்...

ணுவச் சிப்பாய் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத் தலைமையகம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடாப் பிரதேசத்தில் வன்னேரிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 11 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேரடி மோதல்களிலும் படையினரின் மோட்டார் தாக்குதல்களிலுமே விடுதலைப் புலிகளுக்கு இந்த உயிரிழப்பு ஏற்பட்டிருப்பதாகத்தெரிவித்துள்ள இராணுவ இணையத்தளம்,

விடுதலைப்புலிகளின் பதில் மோட்டார் தாக்குதல்கள் மற்றும் அவர்களின் ஆட்களுக்கு எதிரான மிதிவெடிகளினாலும் 4 இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயாப் பிரதேசத்தில் உள்ள ஆண்டான்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் இதில் 8 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களின் பின்னர் படையினர் அங்கு நடத்திய தேடுதலில் 30 சேட்டுக்கள், 30 காற்சட்டைகள், 2 தொப்பிகள் என்பவை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் படையினர் கண்டெடுத்துள்ளார்கள்.

ஆண்டான்குளம் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகள் இந்த ஆடைகளை மறைத்து வைத்திருக்க வேண்டும் என்றும் இராணுவம் தனது செய்தியில் தெரிவிததுள்ளது.

இங்கு இடம்பெற்ற கடும் சண்டைகளில் 4 படையினர் காயமடைந்துள்ளனர். வவுனியா பாலமோட்டைக்கு வடக்கே இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் காலை முதல் பிற்பகல் 2 மணிவரையில் இடம்பெற்ற சண்டைகளில் 3 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகளின் இரண்டு பதுங்குகுழிகள் வரிசையை இராணுவம் கைப்பற்றியிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தனது இணையத்தள செய்தியில் தெரிவித்துள்ளது. (ச-5)

## சகல தரத்தில் உள்ளவர்...

தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளைப் புறக்கணித்து வருகின்றன. இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு எதிராக உயர் தர மாணவி ஒருவரும் அவருடைய தந்தையரும் உயர் நீதிமன்றத்தில் அடிப்படையுரிமை மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவைக் கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை வழங்கியிருந்தது.

இதற்கு அமைய நேற்றுக் கூடிய நீதிமன்றத்தில் சம்பளப் பிரச்சினை தொடர்பான அரசாங்கத்தின் யோசனை முன்வைக்கப்பட்ட போதும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதென உயர் நீதிமன்றம் மறுத்ததாக ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவர் கூறினார்.

இதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் 6 ஆம் திகதிக்கு முன்னர் பிறிதொரு யோசனைத் திட்டமொன்றை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறும் ஆசிரியர்களின் பதவியுயர்வுகள் குறித்துக் கவனம் செலுத்துமாறும் உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குப் பணிப்புரை வழங்கியதாக ஸ்ராலின் தெரிவித்தார்.

அதேநேரம் இன்றுமுதல் உயர் தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு ஆசிரியர்கள் திரும்ப வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டபோதும் இந்த விடயம் குறித்துத் தாம் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் மேலும் கூறினார்.

(ச-5)

## வயலின் இசைக் கலைஞர்...

என்றபாடலால்அனைவரையும்கவர்ந்திழுத்தவர்.

இயலிசை நாடக மன்றத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். சமீபத்தில் தமிழக அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.

வயலின் இசையில் மட்டும் அல்லாமல் பல படங்களுக்கு திரையிசை அமைத்துள்ளார். சினிமா மட்டுமல்லாமல் கர்நாடக இசைக்கும் அவர் ஆற்றிய தொண்டு போற்றத்தக்கது.

இவர் திரையுலகில் பின்னணிப் பாட லும் பாடியுள்ளார். ‘கொட்டாம்பட்டி றோட்டிலே குட்டி போற சோக்கிலே’ என்று இவர் பாடிய பாடல் பெரும் புகழ் பெற்றது.

வயலின் என்றாலே குன்னக்குடி என்ற அளவிற்கு உலகம் முழுவதும் பெரும் புகழைப் பெற்ற இவரது மறைவு இசையுலகம் மற்றும் திரையுலகிற்குப் பெரும் இழப்பு.

இதேவேளை 2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குன்னக்குடி வைத்தியநாதன் வலம்புரி அலுவலகத்திற்கு வந்து நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரச சார்பற்ற தொண்டு...

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாவது,

நாங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைக் கிளிநொச்சியிலிருந்து வெளியே வந்துவிடுமாறு கூறியுள்ளோம். இதற்குச் சில காரணங்கள் உள்ளன. வன்னிப் பகுதியில் தற்போது யாரும் எந்த அபிவிருத்திப் பணியையும் செய்ய இயலாது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மட்டும்தான் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியும். எனவே அவர்கள் கிளிநொச்சியில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களது பாதுகாப்புக்காக நாங்கள் அந்த நிறுவனங்களை அந்தப் பகுதியிலிருந்து வெளியேறச் சொல்லும்போது, அவர்கள் தொடர்ந்தும் இருக்க முடியாது.

எனவே அவர்கள் முழுமையாக வெளியேறிவிட வேண்டும். மேலும் தங்களது பிரசன்னம் அந்தப் பகுதியில் இல்லை என்பதனையும் விளம்பரப்படுத்திவிட வேண்டும் என்றார்.

முன்னைய சம்பவத்தின்போது கூறப்பட்டதுபோல இராணுவம் அவர்களைக் கொலை செய்து விட்டது போன்ற பொய்யான குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு சர்வதேச விசாரணை ஆணையம் போன்ற கோரிக்கைகள் எழுவது போன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கவே நாங்கள் விரும்புகின்றோம்.

எனவே தற்பொழுது தேவையான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள நிலையில் எங்களைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் அந்தத் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் இல்லை. அவர்கள் அங்கிருந்து உடனடியாக விலகுமாறு கோரியுள்ளோம்.

இது தொடர்பான முன்னேற்றங்களையும் எங்களுக்குத் தெரிவிக்குமாறு அவர்களிடம் நாங்கள் கூறியுள்ளோம். அவர்களே இந்த முடிபை மேற்கொண்டிருக்க வேண்டும் என்றார். (ச-3,5)

## நவக்கிரி...

வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகள் அங்கிருந்த இளைஞன் ஒருவரைச் சுட முற்பட்ட போதே இவர்கள் இருவரும் தடுத் ததாகவும் அதன்போது இனந்தெரியாதோர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட் டுத் தப்பிச் சென்றதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவித்தன. (எ-5)

## எறிகணைத்...


பிள்ளைகளின் தந்தையான பாலசிங்கம் ஆனந்தவடிவேல் (வயது-33) என்பவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட் டுள்ளார்.

முன்னதாக இவரைக் காணவில்லை என்று வயல் வெளிகளில் தேடியபோது வைக்கோல் கற்றைக்குள் இருந்து இரண்டு கால்களும் அற்ற நிலையில் உடலமாக மீட்கப்பட்டார். (ச-5)

# மரண அறிவித்தல்கள்

## திரு. வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை

## (Caritas - HUDEC)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வோல்டர் பாலகிருஸ்ணன். இராஜதுரை 04.09.2008 வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் கிறிஸ்ரபெல் தேவஞானம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இராஜதுரை (வட்டுக்கோட்டை) அவர்களின் அருமை மகனும், வேலாயுதபிள்ளை காலஞ்சென்ற திருமதி தேவபுஷ்பம் ஆகியோரின் மருமகனும், தாமரைகுமாரி (England), அரசகுமாரி (Denmark), சாந்தகுமாரி (யாழ்ப்பாண பல்கலைக் கழகம்), ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுரேஸ் (Caritas-HUDEC) இன் அன்பு பெரியப்பாவும் நவரட்ணராஜா, இராசையா, விக்னராஜா (மேல் நீதிமன்ற நீதிபதி-யாழ்ப்பாணம்), ஸ்ரெலா சந்திரன், மேரி கிறிஸ்ரீனா ஆகியோரின் மைத்துனரும்,

மீரா, சன்ரா, செலீனா, அஞ்சலீனா-எட்வேட், அஞ்சலோ, சங்கீதா-சங்கர், சவீந்திரா, சஞ்ஜேந்திரா ஆகியோரின் அருமை மாமனும், சாலினி, பாலலேந்திரா ஆகியோரின் பெரியதந்தையும், யோனத்தன், யோஷுவா, உதேஷன் (Timmy) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 09.09.2008 (இன்று) செவ்வாய்க் கிழமை பி.ப. 3 மணியளவில் கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (C-1512)

தகவல்
இ.த.விக்னராஜா (மைத்துனர்)
(மேல் நீதிமன்ற நீதிபதி-யாழ்ப்பாணம்)

## ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா, ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ்

நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா, ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ் ஆகியோர் நேற்று (08.09.2008) அகால மரணமாகி விட்டனர்.

இவர்கள் ஞானேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும்; அன்பு மகனும், கண்டி நாகேந்திரக் குருக்களின் அன்பு மகளும்; பேரனும், வேலணை நா. யோகீஸ்வரக் குருக்களின் மருமகளும்; பேரனும் ஆவர்.

இவர்களின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


நாகேந்திர பீடம்,
48, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி. (C-1513)

தகவல்;
நா.அமிர்தாம்பிகை அம்மா,
நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் எஸ்.டி.சி.சுரேஸ் அவர்களின் அன்புப் பெரியப்பா

## திரு.வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(இ-10) வலம்புரி நண்பர்கள்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.